Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/848)

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 18 ஞாயிற்றுக்கிழமை (04.09.2011) பக்கங்கள் 16 ஓசை – 340




சிதறின செல்போன்களின் காட்சிக்கு... 13



கூட்டமைப்பின் இன்றைய நிலவரம் 14



திப்பு சுல்தானாக கமல்... 12



சமாதானத்தைக் குழப்பும் சூழ்ச்சி 05


# மேற்குலக அழுத்தம் இந்தியாவிடம் உதவி



(சென்னை)

இலங்கை மீது மேற்குலக நாடுகள் பிரயோகிக்கும் இராஜதந்திர அழுத்தங்களிலிருந்து இலங்கையை மீட்டெடுப்பதற்கும், இவ்வாறான அழுத்தங்களை முறியடிப்பதற்கும் இந்தியா உதவ வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ராஜீவ விஜேசிங்க கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்னையில் இருந்து ஹிந்து நாளிதழுக்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே அவர் மேற்கண்ட கோரிக்கையை முன்வைத்தார்.

புலிகளின் கதை முடிந்து விட்டது என்பது தமக்குத் தெரியும் என்றும், ஆனாலும் வெளிநாடுகளில் உள்ள புலிகளின் ஆதரவாளர்கள் இலங்கையில் பிரிவினைவாத வன்முறைகளைத் தூண்டும் வகையில் செயற்பட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

மேற்குலக நாடுகள் புலிகளுடன் அல்லது அவர்களின் ஆதரவாளர்களுடன் நாடு கடந்த தமிழீழ அரசுடன் பேச்சு நடத்துமாறு வலியுறுத்தி வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

பிரிவினைவாதக் கோட்பாடுகளுடன் இயங்கும் அவர்களுடன் பேசுவது இலங்கை அரசுக்கு சாத்தியமில்லை என்றும், இத்தகைய நிலையில் மேற்குலக அழுத்தங்களை முறியடிக்க இந்திய அரசு உதவவேணடும் என்றும் அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார்.

## நடமாடும் மருத்துவ முகாம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் ஜனாதிபதி ஒருங்கிணைப்பு செயலகத்தின் ஏற்பாட்டில் நடமாடும் மருத்துவ முகாம் ஒன்று நேற்று நடைபெற்றது. இன்றும் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

சென்னை சன்சிட்டி றோட்ரிக் கழகம் மற்றும் மனித வள அபிவிருத்தி நிதியம் ஆகியன இணைந்து நடத்திய இம்மருத்துவ முகாமில் பல்வேறு நோய்களுக்கு இலவச சிகிச்சைகளும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டது.

மேலும் யுத்த அனர்த்தத்தினால் கை, கால்களை இழந்தவர்களுக்கும் செயற்கை அவயவங்கள் வழங்கப்பட்டது.

இம்முகாமில் 14 இந்திய மருத்துவர்களும், 6 இலங்கை மருத்துவர்களும் கலந்துகொண்டு மருத்துவ சிகிச்சைகளை வழங்கினர்.

இதில் ஏற்கனவே பதிவுசெய்யப்பட்ட 36 பேருக்கு (15 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமல் போன மதகுருமார் விசாரணைக்கு கோரிக்கை

(கொழும்பு)

யுத்தகாலத்தில் மதகுருமார் தொடர்பாக உரிய விசாரணைகளை அரசு மேற்கொள்ளவேண்டும் என்று கத்தோலிக்க மதகுருமார் ஒன்றியம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போதும், அதற்கு முந்திய யுத்தகாலத்திலும் மதகுருமார் காணாமல் போயுள்ளனர். எனவே இச்சம்பவங்களுக்கு காரணமானவர்கள் யார் என்பது குறித்து அரசு துரிதகதியில் விசாரணைகளை நடத்தவேண்டும் என்றும் அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. மேற்படி சம்பவங்கள் தொடர்பில் இதுவரை எந்தவிதமான விசாரணையும் நடத்தப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

## அரசின் பதில் இல்லை சுரேஷ் எம்.பி. சீற்றம்



(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து அரசிடமிருந்து ஆக்கபூர்வமான பதில் ஏதும் இதுவரை கிடைக்காமையால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அடுத்த கட்ட நடவடிக்கைக்குச் செல்லவேண்டியுள்ளது என்று யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

அரசாங்கத்துடனான பத்தாவது சுற்றுப் பேச்சுவார்த்தையின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் முன்வைக்கப்பட்ட மூன்று விடயங்கள் தொடர்பில் நேற்றுடன் ஒரு மாதம் பூர்த்தியாகியுள்ள போதிலும் இதுவரையில் அரச தரப்பிலிருந்து உத்தியோகபூர்வமாக எந்தவொரு பதிலும் கிடைக்கவில்லை எனவும், எனவே அடுத்த கட்ட நடவடிக்கைக்கு நகர வேண்டிய நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பேச்சுவார்த்தையின் போது, ஆட்சி அதிகார முறைமை, மத்திய, மாநில (15 ஆம் பக்கம் பார்க்க)

## சிறார் போராளிகள் மரணம் அடேல் பாலசிங்கம் காரணம்

### வழக்கு தொடர முஸ்தீபு



(லண்டன்)

திருமதி அடேல் பாலசிங்கம் சிறுவர் போராளிகளுக்கு 'சயனைட்' கொடுத்து அவர்கள் தற்கொலை செய்துகொள்ள காரணமாக இருந்தார் என்ற குற்றச்சாட்டுக்கள் அடங்கிய மனுப் பத்திரம் ஒன்று பிரித்தானிய அரசிடம் கையளிக்கப்படவுள்ளது.

லண்டனில் வசிக்கும் அடேல் பாலசிங்கத்துக்கு எதிரான இந்தக் குற்றச்சாட்டுகள் அடங்கிய மனுவொன்றை பிரித்தானிய அதிகாரிகளிடம் கையளிக்க அங்குள்ள சிங்கள அமைப்புகள் சில நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிறார் போராளி ஒருவருக்கு அடேல் பாலசிங்கம் கழுத்தில் சயனைட் வில்லையை அணிவித்து விடும் காணொளி ஒன்றை இதற்கு ஆதாரமாகப் பயன்படுத்தவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரித்தானியாவில் இருந்து கொண்டு இன்னொரு நாட்டின் சிறார்களின் தற்கொலைக்கு காரணமாக இருந்தார் என்று அடேல் பாலசிங்கம் மீது குற்றம் சுமத்த மேற்படி சிங்கள அமைப்புகள் திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. போரின்போது இலங்கைப் படையினர் சுற்றிவளைத்த போது சுமார் 1000 சிறார் போராளிகள் சயனைட் அருந்தி தற்கொலை செய்து கொண்டதாகவும், இந்த 1000 சிறார்களினதும் தற்கொலைக்கு அடேல் பாலசிங்கமே காரணம் என்றும் அவர் மீது குற்றம் சுமத்துவதற்கு திட்டமிடப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கண்காணிப்பு கமராக்கள் யாழ். நகரில் பொருத்த ஏற்பாடு



(கொழும்பு)

யாழ்ப்பாண நகரின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் வகையில் கண்காணிப்பு காணொலிப் பதிவுக் கருவிகளைப் பொருத்த பாதுகாப்பு அமைச்சு முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொழும்பு நகரில் பாதுகாப்பு சோதனைச்சாவடிகளை அகற்றிய பின்னர், முக்கிய இடங்களில் கண்காணிப்பு காணொளிப்பதிவுக் கருவிகள் பொருத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு (15 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்துக்குப் பிந்திய இராணுவ நடவடிக்கை

(கொழும்பு)

அவசரகாலச் சட்டம் அமுலில் இல்லாத சூழலில் சாதாரண சட்டங்களின் கீழ் யுத்தத்துக்குப் பிந்திய இராணுவ நடவடிக்கைகளை எவ்வாறு தடையின்றி தொடர்வது என்பது குறித்து இராணுவ அதிகாரிகளுக்கு விசேட பயிற்சி வழங்கப்படவுள்ளதாக இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜெகத் ஜயசூரிய தெரிவித்தார்.

முப்படையினரும் இணைந்து நடத்தும் போர் ஒத்திகை நிகழ்வு திருகோணமலையில் இடம்பெற்று வருகின்றது. எதிர்வரும் 6 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்த ஒத்திகை நிகழ்வினைப் பார்வையிடுவதற்காக இராணுவ தளபதி நேற்று திருகோணமலைக்கு விஜயம் செய்தார்.

இதன்போது ஊடகவியலாளர்கள் சிலரால் முன்வைக்கப்பட்ட கேள்விகளுக்கு விடையளிக்கும் (15 ஆம் பக்கம் பார்க்க)

## விடாது தொடரும் பீதி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்குப் பகுதியில் உள்ள சில இடங்களில் நேற்று இரவு மர்ம மனிதர்களின் நடமாட்டம் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் மக்கள் மிகவும் பீதியுடன் இரவுப் பொழுதைக் கழித்தனர்.

குறிப்பாக அராலி அம்மன் கோயிலடி மற்றும் தொல்புரம் மேற்குப் பகுதியிலேயே இவ்வாறான (15 ஆம் பக்கம் பார்க்க)

# பீதியால் முடங்கிய யாழ். குடா; நிலவரம் அறிய சூறாவளி விஜயம்



(யாழ்ப்பாணம்)

மர்ம மனிதர்களின் அச்சுறுத்தலுக்குள்ளான பிரதேசங்களுக்கு ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) நேற்று முன்தினம் விஜயத்தை மேற்கொண்டு குறித்த பிரதேச மக்களிடம் கருத்துக்களை கேட்டறிந்து கொண்டார்.

மர்ம மனிதர்களின் அச்சுறுத்தலுக்கு உள்ளான கோண்டாவில் வடக்கு மற்றும் கொக்குவில் பிரதேசங்களுக்குச் சென்று அவர்கள் பிரதேச மக்களிடம் சம்பவம் தொடர்பாகக் கேட்டறிந்து கொண்டதுடன் தொடர்ந்தும் இவ்வாறான அசம் பாவிதங்கள் நிகழாவண்ணம் பொலிஸாருடனும், பாதுகாப்புத் தரப்புடனும் கலந்துரையாடிப் பாதுகாப்பான ஓர் சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கை களை மேற்கொள்வதாக அப்பிரதேச மக்களிடம் தெரிவித்தார். இதன்போது நல்லூர் பிரதேச சபை உறுப்பினரும் ஈ.பி.டி.பி.யின் நல்லூர் பிரதேச இணைப்பாளருமான ரவீந்திரதாசனும் உடனிருந்தார்.

## சாயிபாபா நினைவாக முதியோருக்கு அன்பளிப்பு

மானிப்பாயிலுள்ள பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவை நிலையத்தினர் சாயிபாபா மகா சமாதி அடைந்த நாளை நினைவுகூரும் முகமாக சண்டிலிப்பாய் மத்திய முதியோர் பகல் பராமரிப்பு நிலையத்திலுள்ள முதியவர்களுக்கு உடுபுடவைகள், உணவுப் பொருட்கள் வழங்கியுள்ளனர்.

அவர்கள் தினமும் இந்த முதியவர்களுக்குக் காலை உணவாக பணிஸ் வழங்குவதற்கும் ஒழுங்கைகளைச் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (104)

## அல்வாயில் முத்தமிழ் விழா

அல்வாய் வடக்கு இளங்கோ சனசமூக நிலையத்தின் முத்தமிழ் விழா நேற்று முதல் இருநாட்கள் அல்வாய் சிறிலங்கா மகாவித்தியாலயத்தில் நடைபெறுகிறது. நேற்றைய நிகழ்வில் இளங்கோ சனசமூக நிலையத் தலைவர் ந.நிர்மலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பருத்தித்துறைப் பிரதேச செயலர் .வரதீஸ்வரன் பிரதம விருந்தினராகவும், மூத்த எழுத்தாளர் க.தெணியான், யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.அநாதரட்சகன், சேமமடு சண்முகானந்தா மகாவித்தியாலய ஆசிரியர், சு.குணேஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். இன்று நடைபெற இருக்கும் நிகழ்வுகள் இளங்கோ சனசமூக நிலையத்தின் போசகர் வே.சிவயோகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழகச் சட்டத்துறைத் தலைவர் கலாநிதி த.கலாமணி பிரதம விருந்தினராகவும், திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரியின் ஆசிரியர் த.வாகீசன், மருதங்கேணி உத[illegible] அரசாங்க அதிபர் பணிமனையின் கலாசார உத்தியோகத்தர் தி.கார்த்திகேயன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (எஸ்)

## வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு சித்திவிநாயகர் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது. மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தில் வரலாற்று ஞாபகத்திற்கு முற்பட்ட "காணாபத்தியம்" எனப்படும் கணபதி வழிபாட்டு மையமாகப் பிரசித்தமாக விளங்கிவரும் திருவெண்காட்டு சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த சனிக்கிழமை 10.00 மணிக்கு நடைபெற்ற துவஸ ஆரோகணம் எனப்படும் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

பத்து நாட்கள் தொடர்ந்து நடைபெறும் நைமித்திய கிரியா காலத்தில் எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு எம்பெருமான் தேரில் ஆரோகணித்து வீதிவலம் வரும் இனிய திருவிழாக் காட்சியும் அடுத்த நாள் காலை 10.00 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

மூளாய் "பிறீடம் போய்ஸ்" விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்த யாழ் விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விசேட கிறிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதி நாள் நிகழ்வு இன்று மாலை இரண்டு மணியளவில் மூளாய் விக்டோறியா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. கொக்குவில் ஏபி விளையாட்டுக்கழகமும், யாழ். காமாச்சி விளையாடடுக் கழகமும் இன்றைய இறுதிப் போட்டியில் மோதுகின்றன.

## விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண வலயக் கல்வித் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் மற்றும் கல்வி அபிவிருத்தி சம்பந்தமான கலந்துரையாடல் எதிர்வரும் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ் பொதுநூலகக் கேடபோர் கூடத்தில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில், வடமாகாண கல்வி அமைச்சின் செய லாளர் இளங்கோவன், வடமாகாண கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரன் உட்பட மேலதிக கல்விப் பணிப்பாளர்கள், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் திட்டமிடல் பணிப்பாளர்கள், கணக்காளர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (எஸ்)

## நவாலியில் விபத்து; இளைஞர் படுகாயம்




(யாழ்ப்பாணம்)

நவாலிப் பகுதியில் மோட்டார் சைக்கிள் மோதி விபத்திற்குள்ளாகியதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுக்காலை 9.30 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அராலி வடக்குப் பகுதியைச் சேரந்த இராஜதுரை தர்ஷன் (வயது - 27) என்பவரே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைதத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)

## சுற்றுமதில் நிர்மாணம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி புனித பெண்கள் திரேசா கல்லூரியின் பாடசாலையின் சுற்றுமதில் வடக்கின் வசந்தம் என்றிப் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரேயொரு பெண்கள் பாடசாலையானது கடந்த கால யுத்த அனர்த்தங்களுக்குப் பின்னர் போதிய அடிப்படை வசதிகள் இன்றியே இயங்கிவருகின்றது. வகுப்பறைகள் தற்காலிகக் கொட்டகைகளில் இயங்கிவரும் இப்பாடசாலையின் சுற்றுமதில் என்றிப் திட்டத்தினால் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. (கே)

## உலர் உணவு விநியோகம்

WFP United Nations World Food Programme

J/89 கிராம சேவகர் பிரிவில் மணியந்தோட்டப் பகுதியில் மீள் குடியேறிய குடும்பங்களுக்கான உலக உணவுத்திட்டத்தின் கீழ் 5 ஆவது மாதத்திற்கான உலர் உணவுப் பொருட்கள் நேற்று யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்க நடமாடும் வாகன நிவாரணப் பிரிவினால் மணியந்தோட்டப் பகுதிக்குக் குறித்த உலர் உணவுப் பொருட்கள் எடுத்துச் செல்லப்பட்டு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, மணியந்தோட்டம, உதயபுரம் பகுதியில் மீள்குடியேறிய மக்களுக்கான உலக உணவுத்திட்ட நிவாரண விநியோகம் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டிருக்கும் மணியந்தோட்டம் பகுதிக்கு நிரந்தரமாக ப.நோ.கூ.சங்கக் கிளைகள் எதுவும் இதுவரை திறக்கப்படவில்லை என்றும் அப்பகுதி மக்களால் சுட்டிக காட்டப்பட்டிருக்கின்றது. (பா)


# மனோதத்துவ வைத்தியம்

General Psychotheraphy

யாழில் 05.09.2011 - 10.09.2011 வரை

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்குத் திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்மா, மாதவிடாய் கோளாறுகள், வெள்ளை படுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர எந்த மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம்

யாழில் குழந்தை இல்லாமல் இருந்த சிலருக்கு எனது மனோதத்துவ வைத்தியம் மூலம் குழந்தை கிடைத்தமைக்கு ஆதாரம் உண்டு

கமல் ரூரிஸ்ற் இன்,
392/A, மணிக்கூட்டு கோபுரவீதி,
யாழ்ப்பாணம்.
(சிவதர்சன் பாட்ஸ் கடைக்கு மேல், வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோயிலுக்கும் இடையில்)

(C/918)

Hotline :- 0719315664, 0777569205



# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## சிவயோக சுவாமிகள் நினைவுப் பேருரை

**யோக சுவாமிகளின் நற்சிந்தனை காட்டும் ஆன்மீக வாழ்வு**

Spiritual Life Reflected in Natchinthanai of Yoga Swamigal

பேருரை வழங்குனர் :- பேராசிரியர் இலக்கிய கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயர் வாழ்நாள் பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

இடம் :- கைலாசபதி கலையரங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

திகதி :- 05.09.2011

நேரம் :- பிற்பகல் 3.00 மணி

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பதிவாளர்.

(C/920)

**அனைத்து உயிர்களிடமும் அன்பு செலுத்த வேண்டும். இயற்கை விதியை அனுசரித்து வாழ வேண்டும். அடக்கம், பொறுமை, ஜீவகாருண்யம் என்ற குணங்களை வளர்த்துக்கொள்ள வேண்டும்.**

**-பாரதியார்.**

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## சாதகங்களைக் கையாளும் கலை!

தமிழ் மக்களாகிய நமது உள்ள உட்கிடக்கை என்ன? எதை நாம் தீர்வு என்று ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறோம்? நமக்கு என்னதான் வேண்டும்? இதையெல்லாம் வெளிப்படையாக விவாதித்து சாதக பாதகங்களை அலசி நமக்குள் ஒரு முடிவை அடைந்திருக்கிறோமா? அல்லது அப்படி ஒரு முடிவெடுக்கத் தயாராகவேனும் இருக்கிறோமா?

நமது விருப்பம், சமஷ்டி? சுயநிர்ணயம்? வடக்கு கிழக்கு இணைந்த சுயாட்சி? தமிழீழம்? என்னவாகவும் இருக்கட்டும். அதனதன் நடைமுறைச் சாத்தியம் என்னவாக இருக்கிறது என்று நமக்குள் உரையாடி விளக்கவோ விளங்கிக்கொள்ளவோ முயல மாட்டோமா? உலகப் போராட்டக் குழுக்கள் எதனிடமும் இருக்காத வகையில் முப்படைகளும் கொண்டவர்களாய் நம் பலம் பற்றி இறுமாந்திருந்த போது கூட பெற்றுக்கொள்ள முடியாமல் போன எதை இப்போது பெற்றுவிட எதிர்பார்க்கிறோம்?

உலக நாடுகள் எதை நமக்கு எடுத்துத் தந்துவிடும் என்று நம்பி நாம் பேச்சுவார்த்தைகளை முறித்துத் திரும்பிக் கொண்டிருக்கிறோம்? நம் எல்லோர் மனங்களும் ஏதோ ஒரு உரலை இடித்துக் கொண்டிருப்பது எந்த அவலை நினைத்து? இந்தத் தீவில் சிங்கள மக்களை முழுதாக மறுத்தொதுக்கி விட்டு நமக்கென்றொரு ஆட்சியதிகாரத்தைக் கேட்டுக் கொண்டிருக்கிறோமா? அது நடைபெறக் கூடியதுதானா? அவர்களையும் பொருட்படுத்தி நமக்கான தீர்வைப் பெற்றுக்கொள்ள நாம் செய்ய வேண்டியது என்ன? பேச வேண்டியது என்ன?

உலக அரசியல் விவகாரங்களில் நியாயம் அநியாயம் என்பவற்றுக்கெல்லாம் என்ன பொருள்? நம்மைத் தூண்டி விடுகிறவர்கள், அனுதாபம் காட்டி உணர்ச்சியேற்றுபவர்கள், நாம் மட்டுமே ராட்சசர்கள் நடுவே இருப்பதாகச் சொல்லி நாம் போரிட்டழிய ஞாயம் வழங்குபவர்கள் எல்லோரும் உண்மையாக நியாயத்தைக் காப்பாற்றுபவர்களா? நமக்கு வாய்த்திருப்பதுதான் பேசவோ சேர்ந்து வாழவோ முடியாத கொடூர எதிர்த்தரப்பு. அதுதான் உண்மையா?

ஹிட்லரை அரக்கன் என்று பெயர் சூட்டி அவனுக்கு முடிவு கட்டிய தர்மிஷ்ட ஜனநாயக நாடுகள், தாம் என்ன செய்துகொண்டிருக்கின்றன. வாய் ஓயாத மனிதாபிமான வேஷப் பேச்சுகளின் பின்னால் நடந்துகொண்டிருக்கும் மனிதப் படுகொலைகள்தான் எத்தனை? சில மனித உரிமை அமைப்புகளின் கணக்குப்படி ஈராக்கில் உயிரிழப்பு 12 இலட்சங்களைத் தாண்டுகிறது. ஆப்கானிஸ்தான், பாகிஸ்தானிலும் நிலைமை அதற்குச் சளைத்ததல்ல. வியட்நாமில், சிலியில், எல்சல்வடோரில், பாலஸ்தீனத்தில்... பரந்த மனப்பான்மை கொண்டதாகச் சொல்லப்படும் பிரான்சும் மற்றும் ஐரோப்பிய நாடுகளும் கூட அல்ஜீரியாவில், ருவாண்டாவில் செய்துமுடித்த பாதகங்கள் சிறியவையல்ல.

ரஷ்ய எழுத்தாளர் துர்கனேவ் சொன்னார், "ஒரு பூகம்பம் வந்து ரஷ்யா முழுக்க அழிந்து போனாலும் உலகத்தில் ஒருவரும் கவலைப்படப் போவதில்லை." இதை நாமும் புரிந்துகொள்ள வேண்டும். நாம் கஷ்டப்படக் கஷ்டப்பட வேறு யாரும் உதவிக்கு வரக்கூடும் என்று பெருங்குரலெடுத்துப் புலம்பிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. நாம்தான் பேசியாக வேண்டும். தீர்வு கண்டாக வேண்டும்.

எங்களை நாங்களே அழித்துக் கொள்ளும் விதமாக, வாழ்வைச் சிதைத்துக் கொள்ளும் விதமாக எதிர்ப்பை வைத்துக்கொள்வது புத்தியில்லை. சமூகத்திற்கான கருத்தை உருவாக்குபவர்களும் இன்னும் பிரமைகளிலிருந்து விடுபட்டதாகத் தெரியவில்லை. தங்கள் தங்களது நியாய உணர்வினடிப்படையில் உருவாக்கி வைத்திருக்கும் இலட்சியத்தை முக்கியப்படுத்தி ரோசமும் வீம்புமாகவே இன்னமும் மக்களை உணர்ச்சியில் கருக்கி வருவதை வெறும் சுயநலம் என்றே புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. தமக்குச் சரி என்று படுவதை மட்டும் விடாமல் பற்றிக் கொண்டிருக்கும் எல்லையற்ற அகந்தையால் சமூகத்தையும் நெருக்கடிகளுக்கு ஆளாக்குபவர்களாக இருக்கிறார்கள்.

இவர்களது 'இலட்சியப் பார்வை'யும், பெறச் சாத்தியமான தீர்வின்பால் நம்மை நகர விடுவதில்லை. உலகில் நமக்கு மட்டுமே அநீதிகள் நடந்திருப்பதாகச் சொல்லி, மக்களைக் கொதிகலன்களுக்குள் போட்டு மூடி விடுவதாக முடிகின்றன இவர்கள் புலம்பல்கள். இதிலிருந்து வெளியே வந்து உண்மைகளைப் பேசுவது எப்போது?

– ஆசிரியர்.

# மூன்று நிபந்தனைகளுக்குப் பதிலை அளித்தால் அரசுடனான பேச்சுக் குறித்துப் பரிசீலிக்கப்படும்

## செல்வம் எம்.பி.கூறுகிறார்

(மன்னார்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்திருக்கும் மூன்று நிபந்தனைகளுக்கு அரசாங்கம் பதிலை முன் வைத்தாலேயே அதனுடனான பேச்சுக் குறித்துப் பரிசீலிக்க முடியுமென கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ரெலோவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

தேர்தல் சமயம் என்பதால் இரு கட்சியினரும் பேச்சுக் குறித்து பேசுகின்றனரே தவிர தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு குறித்து உளப்பூர்வமான சிந்தனையில் இல்லையெனவும் அவர் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சினை அரசாங்கம் முறித்துக் கொள்ளவில்லையெனவும் பேச்சுவார்த்தைக்கு அரசாங்கம் எந்நேரமும் தயாராகவுள்ளதாகவும் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்த கருத்துத் தொடர்பாகவே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், அரசாங்கத்துக்கும் கூட்டமைப்புக்குமிடையிலான பேச்சுத் தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினரும், ஐக்கிய தேசியக் கட்சியினரும் தற்போது பேசுவதற்கு தேர்தலே காரணமாகும். தமிழ் மக்களின் தீர்வு குறித்து பெறுவதற்கே பேச்சு முறியவில்லையெனவும், பேச்சு இடைநிறுத்துவது நீடித்தால் சர்வதேச அழுத்தம் அரசுக்கு அதிகரிக்குமெனவும் தெரிவிக்கின்றனர். உண்மையில் தமிழ் மக்களின் தீர்வு தொடர்பில் இரு கட்சியினருக்கும் மனப்பூர்வமான அக்கறையோ சிந்தனையோ இல்லை.

எம்மைப் பொறுத்தவரை அரசியல் தீர்வுக்காக நாம் முன் வைத்த யோசனையில் ஆட்சிக்கட்டமைப்பு, மத்திய மற்றும் அதிகாரப் பகிர்வுக்குரிய பிரிவுகளுக்கிடையே பங்கிடப்படும் விதம் மற்றும் வரி மற்றும் நிதி அதிகாரங்கள் குறித்த மூன்று விடயங்கள் குறித்துப் பதிலை அரசாங்கம் முன் வைத்தால் பேச்சுக் குறித்துப் பரிசீலிக்க முடியும்.

தமிழ் மக்களை ஏமாற்றி வாக்குகளை பெறவே இவ்வாறு கதையளக்கப்படுகின்றது. நல்லெண்ணம் தொடர எந்நேரமும் தயார் என்பது எல்லாம் வெறும் பம்மாத்தாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மீன்பிடி டிப்ளோமாவைப் பூர்த்தி செய்த மாணவர்களுடன் கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

மீன்பிடி டிப்ளோமா கற்கை நெறியினைப் பூர்த்தி செய்து தொழில் வாய்ப்பின்றி உள்ள மாணவர்களின் பிரச்சினைகள் மற்றும் அவர்களுக்கான தொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பில் ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் சந்தித்துக் கலந்துரையாடினார்.

நேற்றுமுன்தினம் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டத் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்ற சந்திப்பில் வடக்கு, கிழக்கில் மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற நோக்கிலும், மீன்பிடி டிப்ளோமா கற்கை நெறியினைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்கு அதனூடாக வேலைவாய்ப்பினை வழங்குவது தொடர்பிலும் ஈ.பி.டி.பி.நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் மீன்பிடித்துறை அமைச்சர் மற்றும் அதன் செயலாளர், உயரதிகாரிகளுடன் மேற்கொள்ளப்பட்ட சந்திப்பைத் தொடர்ந்து இணக்கம் காணப்பட்ட விடயங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் ஈ.பி.டி.பியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன், மீன்பிடி டிப்ளோமா கற்கைநெறியினைப் பூர்த்தி செய்த வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 50 மாணவர்களும் கலந்துகொண்டனர்.

## யாழ்.வலயப் பாடசாலைகளிற்கு யுனிசெவ்வின் தளபாட உதவிகள்

(அச்சுவேலி)

கல்வியமைச்சின் அனுமதியுடன் யுனிசெவ் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்கு வழங்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான ஒரு தொகுதி மேசைகள் யாழ்.கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

யாழ்.வலயப் பாடசாலைகளில் நிலவும் தளபாடப் பற்றாக்குறை தொடர்பாக பாடசாலைகளினூடாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப்படையில் கிடைக்கப்பெற்ற மேற்படி மேசைகள் பாடசாலைகளிற்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

அனேக பாடசாலைகளில் தளபாடப் பற்றாக்குறைகள் நிலவி வருகின்ற சூழ்நிலையில் வழங்கப்பட்ட இத்தளபாடங்கள் சில பாடசாலைகளுக்குப் போதுமானதாக இல்லை எனவும் மேலும் தளபாடங்கள் கிடைக்கப்பெறும் சந்தர்ப்பத்தில் அவை மீண்டும் தேவை அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்படும் எனவும் தெரியவருகிறது.

இதேவேளை, சில வாரங்களுக்கு முன்னர் இவ்வாறான சில பாடசாலைகளுக்கு கதிரைகள் வழங்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (03)

## ஆலயத்தை ஆடம்பரக் களியாட்ட மையமாக மாற்றக் கூடாது

(யாழ்.நிருபர்)

மனதிற்கு மகிழ்வான சூழலை ஏற்படுத்துவதற்காகவே இறைவனுக்கு திருவிழா, அலங்காரம் பூசைகள் எல்லாம் செய்யப்படுகின்றன.

ஆலயச் சூழல் கலை, மணம் கமழும் இடமாக அமைய வேண்டும். ஆலயத்தை ஆடம்பரக் களியாட்ட மையமாக மாற்றக்கூடாது. ஆலயச் சூழலில் எமது சமயகலாசாரத்துக்கு அமைவான நிகழ்வுகள் மாத்திரமே நடைபெறவேண்டும் என இரா.செல்வவடிவேல் தெரிவித்தார்.

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் உற்சவகாலத்தில் 63 நாயனார் மண்டபத்தில் நடைபெற்ற ஆன்மீகச் சொற்பொழிவின் இறுதிநாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

வழிபாடு என்பது உடல்ரிதியாக அன்றி உளரீதியாக அமைய வேண்டும். மனதில் இறைவனை நிறுத்துவதுதான் உண்மையான பக்தியாக அமையும். நாம் எமது மனதில் பல்வேறு வகையான அழுக்குகளைச் சேர்த்துக் கொண்டு துன்பமடைகிறோம். இந்த மன அழுக்கை அகற்றுவதுதான் பக்தியின் நோக்கமாக அமைய வேண்டும் ஆலயங்களில் நடைபெறும் நிகழ்வுகள் அதற்கு உதவவேண்டும் என்றார். (10)

# அரசு-சர்வதேசம் இடையேயான முறுகல் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தலாம்

## எச்சரிக்கின்றனர் தனியார் துறையினர்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் சர்வதேச சமூகத்திற்கும் இடையிலான முறுகல் நிலை பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும் என தனியார்துறையினர் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்குதல் தொடர்பில் அரசாங்கத்திற்கும் சர்வதேச சமூகத்திற்கும் இடையிலான தொடர்பை உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் தனியார் துறையினர் சுட்டிக் காட்டியுள்ளனர். இலங்கையின் நான்கு முன்னணி தனியார்துறை வர்த்தக அமைப்புக்கள் கூட்டாக இணைந்து வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்கப்படவில்லை என்ற சர்வதேச சமூகத்தின் குற்றச்ச்சாட்டுக்களுக்கு இதுவரையில் பதிலளிக்கப்படவில்லை என தனியார்துறையினர் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச சமூகத்துடன் ஏற்படும் முறுகல் நிலைமைகளினால் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிலாளர்கள் அதிகளவான பாதிப்பினை எதிர்நோக்க நேரிடுவதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியம் ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகைத் திட்டத்தை இரத்துச் செய்த போது சிறிய ஆடைக் கைத்தொழில் உற்பத்திசாலை உரிமையாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் அதிகளவில் பாதிக்கபட்டனர். அமெரிக்கா ஏதேனும் பொருளாதார கெடுபிடிகளை விதித்தால் அதன் மூலம் நாட்டு மக்களே அதிகளவில் பாதிக்கப்படுவர்.

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கை பழையவற்றை மீட்டுவதற்கு மட்டுமே பயன்படும். சர்வதேச சமூகத்துடன் உரிய முறையில் தொடர்புகளைப் பேணாவிட்டால் அது நாட்டின் பொருளாதாரத்திற்குப் பாரிய பின்னடைவை ஏற்படுத்தும் எனச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# அபிவிருத்தித்திட்ட பயனாளிகள் தெரிவில் பாரபட்சம் காட்டக் கூடாது

## நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் எல்லா மக்களும் பாதிக்கப்பட்டவர்கள். அந்த வகையில் குறிப்பிட்டளவிலான உதவித் திட்டங்களுக்கான பயனாளிகள் தெரிவில் பாரபட்சம் இன்றி முன்னுரிமைப்படுத்தப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் இதில் தவறுகள் இடம்பெற்றுவிடக்கூடாது. என ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்தார்.

கிளிநொச்சி அரச செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரச அதிபர் உள்ளிட்ட அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இம்மாவட்டத்திலும் பல்வேறு துறைகளிலும் ஆளணி மற்றும் இதர பௌதீக ரீதியான வளப்பற்றாக் குறைகள் உண்டு. இருப்பினும் கடந்த காலத்தோடு ஒப்பிடுகையில் அவை ஓரளவு தீர்க்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்தினதும் மக்களினதும் நலன் கருதி அனைத்து அபிவிருத்தி வேலைத் திட்டங்களையும் ஆரம்பிக்கும் முன் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு அதன் அனுமதி பெறப்படல் வேண்டும். எந்தவொரு அபிவிருத்தித் திட்டத்திற்கும் பயனாளிகள் தெரிவு செய்யப்படும்போது நேர்மையான முறையில் நியாயமான பாதிப்புக்கு முன்னுரிமை அடிப்படையில் தெரிவுகள் இடம்பெறல் வேண்டும்.

மக்கள் எதிர்கொள்கின்ற காணிப் பிரச்சினைகளை இயன்றவரை விரைவாகத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளும் அவசியமாகும். அபிவிருத்தி வேலைகளின் முன்னேற்ற அறிக்கை மாதாந்தம் அறிவிக்கப்பட வேண்டும். இதனைவிட வாக்காளர் இடாப்பில் பதிவினை மேற்கொள்வதற்கு விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமாகும் எதிர்காலத்தில் இம்மாவட்டத்தில் 10கிராமங்கள் மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்வதற்கு உள்வாங்கப்படுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் அரச செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் மோகனபவன் மேலதிக அரச அதிபர் சீனிவாசன் தலைமை உதவி அரசாங்க அதிபர் ஜெயராணி, கரைச்சி கண்டாவளை பளைப் பிரதேச உதவி அரசாங்க அதிபர்கள் நாகேஸ்வரன், சத்தியசீலன், முகுந்தன் மற்றும் கரைச்சி பூநகரி பளைப் பிரதேச சபை செயலாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (29)

# கந்தரோடை இக்கிரானை வீதியை மழைக்கு முன்னர் புனரமைக்க கோரிக்கை

(வலிகாமம்)

சுன்னாகம் கந்தரோடையையும்,அளவெட்டியையும் இணைக்கும் இக்கிரானை வயல் வெளி வீதியின் ஒருபகுதி நீண்டகாலமாகத் திருத்தி யமைக்கப்படாது குண்டும் குழியுமாகக் காணப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ் வீதியினை மகாஜனக் கல்லூரி மாணவர்களும் வயல் வேலைக்குச் செல்லும் விவசாயிகளும் பயன்படுத்தி வருகின்றனர். தற்போது இவ் வீதி பாவிக்க முடியாத நிலையில் காணப்படுவதால் ஏறக்குறைய 2கி.மீற்றர் தூரம் அதிகமாகவுள்ள மாகியப்பிட்டிச் சந்தி, அலுக்கைச் சந்தியூடாகவே 768ம் இலக்கப் பேருந்தில் மாணவர்கள் பயணிக்க வேண்டியுள்ளது.

எனினும் இவ் வீதி திருத்தப்பட்டிருப்பின்,மாணவர்கள் குறுகிய நேரத்தில் துவிச்சக்கர வண்டியிலோ வேறு வாகனத்திலோ விரைவாகச் செல்லலாம் எனப் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

அதுமட்டுமின்றி, காலபோக நெற் பயிர்ச்செய்கை ஆரம்பமாவதால் வயல் வேலையின் பொருட்டு உழவு இயந்திரமோ மாட்டு வண்டியோ கொண்டு செல்ல முடியாத நிலை காணப்படுவதாகவும், விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

குறித்த வீதிப் புனரமைப்பு தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மழைகாலத்திற்கு முன்னர் நடவடிக்கை எடுக்குமாறு இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (06)

# நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

(வலிகாமம்)

சுழிபுரம் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை முன்றலில் பாடசாலை அதிபர் க.சந்திரசேகரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவிற்குப் பிரதம விருந்தினராக வடமகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்து கொள்ளவுள்ளார்.

நிறுவுநர் தின நினைவுப் பேருரையினை இப் பாடசாலையின் பழைய மாணவியும் ஆசிரியருமான திருமதி. நாகராணி சீதரன் மலரின் ஆய்வுரையினை பாடசாலைப் பழைய மாணவனும்,பிரபல தொழிலதிபருமான சோம. திருச்செல்வம் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (06)

# சான்றிதழ் கற்கைநெறி விண்ணப்பங்கோரல்

(யாழ்.நிருபர்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தினால் தொழிலுரிமைத்துவமும் சிறுவணிக முகாமைத்துவமும் என்னும் சான்றிதழ் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக் கற்கைநெறியைத் தொடர விரும்புவோர் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் குறைந்தது 6 பாடங்களில் சித்திபெற்றிருக்க வேண்டும்.

விண்ணப்பங்களை அனுப்பும் போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கற்கைநெறியின் பெயரைக் குறிப்பிட்டு எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக இலங்கை திறந்த பல்கலைக்கழகம் யாழ் பிராந்திய நிலையம்,பிறவுண் வீதி கொக்குவில். என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டுமென இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ்.பிராந்தியம் அறிவித்துள்ளது. (10)

# டெங்குநோயை கட்டுப்படுத்த சுகாதார பகுதியினர் நடவடிக்கை

(யாழ்.நிருபர்)

யாழ்.குடாநாட்டில் வேகமாகப் பரவி வரும்டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு சுகாதாரப் பகுதியினர் துரித நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்தல் மற்றும் டெங்கின் தாக்கம் குறித்த விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

மாரிகாலம் தொடங்கவுள்ளதனால் நுளம்பின் பெருக்கமும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

மழைக்கு முன்னர் பல்வேறு இடங்களையும் துப்புரவு செய்வதோடு வடிகால்வாய்க்கால் மற்றும் கழிவுகள் ஓடும் பகுதிகள் போன்றவற்றை தினமும் சுத்தம் செய்து சீர்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் திடீரென இந்த டெங்கு நோயினால் கடந்த ஒரு வராரத்தில் இருவரின் உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளன.

இந்த டெங்கின் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு மக்கள் சுகாதார வசதியை பின்பற்றுவது மிக முக்கியமான கடமையாகும்.

அத்துடன் வீட்டு குடியிருப்பாளர்கள் தமது குடியிருப்புச் சுற்றாடல்களை மிகவும் துப்புரவாக வைத்திருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (10,வி)

# குளவி கொட்டிய நபர் வைத்தியசாலையில் அனுமதி

(ஒட்டுசுட்டான்)

கற்சிலைமடுப் பிரதேசத்தின் பேராறு பகுதியில், காட்டுக்குள் விறகு வெட்டச் சென்ற ஒருவர் குளவி கொட்டியநிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வேலாயுதம் வயது 52என்பவரே இக் குளவித்தாக்கத்திற்கு ஆளானவராவார்.

கடந்த வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

குறித்த நபர் விறகு வெட்டுவதற்காக தனியாக காட்டுக்கு சென்ற வேளை குளவி கொட்டியதால் மயக்கமடைந்ததாகவும் அப்பகுதியால் மாடு கலைப்பதற்காக வந்த வேறொருவர் இந்த நபரைக் கண்டு தூக்கி வந்து ஒட்டுசுட்டான் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபின்னர் மேலதிக சிகிச்சைக்காக முள்ளியவளை மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தற்போது அங்கு சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (101)

# தேசிய சிற்ப ஓவிய விழாவிற்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளது

(யாழ்.நிருபர்)

கலாசார மற்றும் சமூக அலுவலர்கள் அமைச்சு நடத்தவுள்ள சிற்ப ஓவிய விழா 2011க்கு படைப்பாளிகளிடமிருந்து ஆக்கங்கள் கோரப்படுகின்றன.

நாடளாவிய ரீதியில் சிற்ப ஓவிய ஆக்கங்களின் மதிப்பீடு மற்றும் கலைத்துறையில் மறைந்திருப்போரையும் தனியாக இருப்போரையும் வெளியுலகுக்குக் கொண்டு வருதல் அவர்களின் ஆக்கங்களை அறிந்து வலுப்படுத்தல் நாட்டிலுள்ள சிற்ப ஓவியக் கலைகளில் ஆர்வமுள்ள ரசிகப்பெருமக்களின் ரசணைக்கு இடமளித்தல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு தேசியரீதியில் இவ்விழாவை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகிறது.

படைப்பாக்கங்கள் உருவப்படம் வர்ணந்தீட்டுதல், சுவரோவியங்களைப் பிரதிமைப்படுத்தல், பூமிக் காட்சிகள் அச்சுப்படுத்தல், சிற்பங்கள் பொருத்தல் என்ற வகையில் சமர்ப்பிக்கலாம். மேலதிக விபரங்களை 0113188873 இலக்க தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும். (10)



சேவாலங்கா மன்ற அனுசரணையில் அளவெட்டி மகாஜனசபை வளாகத்தில் அமைக்கப்படவுள்ள பெரியார் மயில்வாகனம் சிறுவர் பூங்காவிற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றவேளை மகாஜன சபைத்தலைவர் வை.சுப்பிரமணியம் அடிக்கல்லை நாட்டி வைப்பதனையும் வடமாகாண பொதுநிர்வாக செயலக நிர்வாக உத்தியோகத்தர் இ.இராஜகோபாலன் உரையாற்றுவதையும்,நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் காணலாம்.

# சமாதானத்தைக் குழப்பும் சூழ்ச்சியே கிறிஸ்மனிதன் என்ற வதந்தியாகும்

## பொலிஸ் அத்தியட்சகர் சமன்சிகேரா

(யாழ்ப்பாணம்)

நாட்டில் நிலவும் சமாதானத்தைக் குழப்புவதற்கான சூழ்ச்சியில் பலர் ஈடுபட்டுள்ளதாகவும், அதுதான் மர்ம மனிதன் என யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமன் சிகேரா தெரிவித்தார்.

யாழ். பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுனதினம் மாலை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

கிராமங்களில் மர்ம மனிதன் என்று கதை பரப்புகின்றார்கள். கிறிஸ் மனிதன் என பொய்யான பிரசாரம் செய்பவர்களை மக்கள் பொலிஸாருக்குத் தெரிவிக்க முன்வரவேண்டும்.

அண்மையில் கொக்குவில் பகுதியில் திருமண வீட்டில் இருந்த இளைஞர் குழு ஒன்று மது அருந்தி விட்டு தென்பகுதியிலிருந்து வந்த சுற்றுலாப் பேருந்து மீது தாக்குதல் நடத்தியது.

இதற்குக் காரணம் மக்கள் சுயநினைவில்லாமல் இருக்கின்றமையும், தேவையற்ற நடமாட்டமுமே. இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் இருக்க பொதுமக்கள் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ய வேண்டும்.

சட்டத்தை நிலைநாட்ட பொலிஸாராகிய நாம தயாராகவுள்ளோம். குருநகர் இராசாவின் தோட்டம் பகுதியிலும் இவ்வாறு தான் நடந்துள்ளன. ஆனால், அங்கு கிறிஸ் மனிதன் இல்லை.

இன்று தென்பகுதியிலிருந்து வரும் மக்களினால் யாழ்ப்பாணத்துக்கு வருமானம் வருகிறது. உற்பத்திப் பொருட்கள் அதிகமாக விற்கப்படுகின்றன. வீடுகளில் வாடகையாக அறைக்கு பணம் வசூலிக்கப்படுகிறது. இவ்வாறாக தற்போது வருமானம் ஈட்டும்போது வடக்கில் கிறிஸ் மனிதன் என வதந்தியைப் பரப்பி அவர்களை பயமுறுத்தினால் அவர்கள் இங்கு வரமாட்டார்கள்.



இப்படியொரு சமாதானச் சூழலில் இந்தப் பொயப் பிரசாரங்களினைத் தடுக்க விழிப்புக் குழுக்களைப் பல பிரதேசங்களில் நியமித்துள்ளோம்.

நான் மக்களுக்குச் சொல்கின்ற விடயம் என்னவெனில் சட்டத்தை நிலைநாட்ட பொலிஸ் மற்றும் இராணுவம் இருக்கிறது. பொய்யான வதந்திகளுக்கும் அநாவசியமான பிரச்சினைகளுக்கும் முன்வரவேண்டாம்.

கிறிஸ் பூதம் தொடர்பாக பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்க வேண்டும். 24 மணித்தியால சேவை, மொபைல் சேவை, சைக்கிள் சேவை எனப் பல்வேறு சேவைகள் இருக்கின்றன.

தேவை ஏற்படின் நேரடியாக என்னைச் சந்தித்துப் பேச முடியும். இற்காக யாருடனும் வர வேண்டிய அவசியம் இல்லை. மொழி தெரியாது என்ற பிரச்சினையும் இல்லை. உங்களுடைய கருத்துக்களை என்னிடம் சொல்லலாம் எனத் தெரிவித்தார்.

(எஸ், எவ்)

## ஆலயச் சுற்றாடலில் குப்பைகூளங்கள்



யாழ். அரசடி வீதியில் உள்ள பரவைக்குளம் சிவன் கோயிலுக்கு மிக அண்மையில் மதில் ஓரங்களில் வீட்டுக்கழிவுகள் கொட்டப்பட்டு வருவதனால் அப்பகுதி அழுக்கு நிறைந்து துர்நாற்றம் வீசுகின்றது. இந்தப் பாதையூடாகப் பயணிக்கும் பயணிகள பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருவதாகத் தெரிய வருகிறது. அப்பகுதியில் குப்பைகள் போடவேண்டாம் என எழுதப்பட்டுள்ள போதிலும் அதனைப் பொருட்படுத்தாது குப்பைகளைப் போடுவது மிகவும் மனவேதனையளிக்கின்றது. (03)

# மந்த கதியில் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டையின் புனர் நிர்மானப் பணிகள் மந்த கதியிலேயே நடைபெற்று வருகின்றன.

கடந்த மாதத்திற்கு முன்னர் இந்தப் புனர்நிர்மாணப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டன.

தற்போது அவை ஆமை வேகத்திலேயே இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. கோட்டையின் சுற்று மதில் புனரமைக்கும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

அதனைவிட கோட்டையைச் சுற்றியுள்ள அகழியும் முன்னர் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. தற்போது அந்தப் புனரமைப்புப் பணிகள் இதுவரைக்கும் ஆரம்பிக்கப்படவில்லை.

நெதர்லாந்து அரசின் நிதியுதவியுடன் கோட்டையின் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (வி)

# விலைப்பட்டியல் இல்லாத விற்பனைப் பொருட்கள்

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான், கற்சிலைமடு ஆகிய பிரதேசங்களிலுள்ள வர்த்தக நிலையங்களில் விற்பனைக்குரிய சில பொருட்களின் விலைகள் காட்சிப்படுத்தப்படுவதில்லை எனவும், இதனால் தாம் அந்தப் பொருட்களுக்கு அதிக விலை கொடுக்க வேண்டியிருப்பதாக நுகர்வோர் கவலை தெரிவிக்கின்றனர்.

இதில் சில்லறையாக விற்பனை செய்யப்படும் மரக்கறி வகைகள், தேங்காய், கருவாடு போன்ற பொருட்களின் விலைகள் வியாபாரிகளால் காட்சிப்படுத்தப்படுவதில்லை.

இந்நிலையில் அப்பொருட்களை வியாபாரிகள் அதிக இலாபம் வைத்து விற்பனை செய்து வருவதாகவும் நுகர்வோர்களால் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இவ்விடயம் குறித்து வியாபாரிகள் இப்பொருட்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலைப்பட்டியலைத் தெரியப்படுத்தினால் நுகர்வோர் சிரமமின்றிப் பொருட்களைக் கொள்வனவு செய்யக்கூடியதாக இருக்கும் என நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

(101)

# தென்பகுதிக்குச் செல்லும் நீர்வேலி வாழைக்குலைகள்

## குடாநாட்டில் வாழைப்பழ விலை அதிகரிப்பு

(நீர்வேலி)

நீர்வேலி வாழைக்குலை விற்பனைச் சந்தையில் வாழைக் குலைகளுக்குப் பற்றாக்குறை நிலவி வருகின்றன.

தென்பகுதியிலிருந்து வரும் வியாபாரிகள் இச் சந்தையில் காய்க்குலைகளை அதிகளவில் கொள்வனவு செய்துகொண்டு செல்கின்றனர்.

இவ்வாறு வியாபாரிகள் இங்கு வாழைக்குலைகளை முண்டியடித்துப் பெற்றுச் செல்வதால் அதற்குப் பற்றாக் குறை ஏற்படுவதோடு அதன் விலையும் சடுதியாக அதிகரித்துக் காணப்படுகின்றன. இதேசமயம் யாழ். குடாநாட்டுச் சந்தைகளில் கதலிப்பழம் கிலோ 70 ரூபாவாகவும், இதரை கிலோ 60 ரூபாவாகவும் விற்கப்படுகின்றன. (வி)

# தற்காலிகமாகத் திருத்தப்பட்ட பாலம்



(யாழ்ப்பாணம்)

யாழ். பெருமாள் கோவில் வீதியில் கடந்த பல வருடகாலமாக உடைந்து கிடந்த பாலம், யாழ். மாநகரசபையினால் கடந்த முதலாம் திகதி தற்காலிகமாகத் திருத்தப்பட்டுள்ளது.

குறித்த பாலத்தின் இடையே இடைவெளிகள் காணப்பட்டதனால் அவ்வீதியூடாகச் செல்வோர் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இந்த நிலையில், மாநகரசபை குறித்த பாலத்தை தற்காலிகமாகத் திருத்தியுள்ளதுடன், அடுத்த ஓரிரு வாரங்களில் முற்று முழுதாகப் புனரமைக்கப்படவுள்ளதாகவும், மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (எஸ்)

# யாழ். பல்கலை வரலாற்றுத்துறையின் தொல்லியல் மரபுசார் பொருட்காட்சி

(யாழ்.நிருபர்)

யாழ்ப்பாணத்தின் பூர்வீகக் குடிகள், குடிசனப் பரம்பல், வரலாறு, தொல்லியல், கலாசாரம், பண்பாடு, மரபுரிமைச் சின்னங்கள் என்பவற்றை வெளிப்படுத்தும் பொருட்காட்சி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத் துறையினரால் எதிர்வரும் 24 ஆம் திகதியில் இருந்து 27 ஆம் திகதி வரை நடத்தப்படவுள்ளது.

இக்கண்காட்சியில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் தொல்லியல் அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்டதும் இதுவரை மக்கள் அறிந்திராததுமான யாழ்ப்பாணத்து தொல்லியல் மரபுரிமைச் சின்னங்கள் காட்சிப்படுத்தப் படவுள்ளன.

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களால் பயன்படுத்தப் பட்டு காலமாற்றம் மற்றும் விஞ்ஞான வளர்ச்சி போன்ற காரணங்களினால் பாவனையின்றி அருகிப் போய்விட்ட பல்வேறு பொருட்களும் இங்கு காட்சிக்கு வைக்கப்படவுள்ளன.

வரலாற்றுப் பழமைவாய்ந்த நூல்கள் ஓலைச் சுவடிகள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், நாணயங்கள், கல்வெட்டுக்கள், பாரம்பரிய விவசாயம், மீன்பிடி, கைத்தொழில், மருத்துவம், சடங்குகள், தொடர்பாடல்கள் முதலிய கருவிகள, உபகரணங்கள் என்பவற்றையும் காடசிப்படுத்தப்படவுள்ளனர். இத்தகைய பொருட்களை வைத்திருப்போர் அவை குறித்த தகவல்களைப் பல்கலைக்கழகத்துடன் தொடர்புகொண்டு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

நன்கொடையாக வழங்க முடியாவிட்டால் கடனாக வழங்கிப் பொருட்காட்சி சிறப்புற நடைபெற ஒத்துழைப்பு வழங்கி உதவுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். பொருட்கள் திருப்பி ஒப்படைக்கப்படும் என்ற உறுதிப்பாடு பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும். எமது பாரம்பரிய பண்பாட்டு வாழ்வியல் விழுமி யங்களை இளைய தலைமுறையினர் அறிந்து கொள்வதற்கு இக்கண்காட்சி பெரிதும் துணைபுரியும் என எதிர்பார்க்கப்படுகிறது. (10)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(04.09.2011 – ஞாயிற்றுக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**
கர வருஷம்
ஆவணி 13 ஆம் நாள்.
இராகுகாலம் 04.35–6.05, சுபநேரம் 9.05 –10.35,
நட்சத்திரம்: அனுஷம் பி.இ 2.50 வரை
திதி: ஸப்தமி மாலை 5.25 வரை

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:**– பணவரவு, தேக ஆரோக்கியம், அதிகாரப் போட்டி, குடும்பத்தில் மகிழ்ச்சி, கடன் வசூல்.

**ரிஷபம:**– குடும்பத்தில் கவலை, பணக் கஸ்டம், மருத்துவச் செலவு, நண்பர் தொல்லை, வீண் அலைச்சல்.

**மிதுனம் :**– பணவரவு, தேக ஆரோக்கியம், குடும்பத்தில் மகிழ்ச்சி, உறவினர் வருகை, மனக் கிலேசம்.

**கடகம்:** – குடும்பத்தில் சபலம், பணக் கஷ்டம், மருத்துவச் செலவு, நண்பர் வருகை, வீண்அலைச்சல்.

**சிம்மம்:**–பணவரவு, தேக ஆரோக்கியம், குடும்பத்தில் குதூகலம், நண்பர் தொல்லை, விபத்து வரலாம்.

**கன்னி :**– குடும்பத்தில் குழப்பம் பணக் கஷ்டம், மருத்துவச் செலவு, மனச் சஞ்சலம், உறவினர் வருகை.

**துலாம் :**– பணவரவு, தேக ஆரோக்கியம், குடும்பத்தில் மகிழ்ச்சி, மன மகிழ்ச்சி, அதிகாரப் போட்டி.

**விருச்சிகம்:**– குடும்பத்தில் சபலம், பணக் கஷ்டம், மருத்துவச் செலவு, வீண்அலைச்சல், நண்பர் தொல்லை.

**தனுசு:**– பணவரவு, தேக ஆரோக்கியம், குடும்பத்தில் கவலை, அயலவர் துன்பம், மனக்கிலேசம்.


**மகரம:**– குடும்பத்தில் குழப்பம், பணக் கஷ்டம், மருத்துவச் செலவு, மனக்கிலேசம், தெரு விபத்து.

**கும்பம் :**– பண வரவு, தேக ஆரோக்கியம், குடும்பத்தில் குழப்பம், மனக் கிலேசம், வீண் வதந்தி.


**மீனம்:**– குடும்பத்தில் கவலை, பணக் கஷ்டம், மருத்துவச் செலவு, மனச் சஞ்சலம், நண்பர் தொல்லை.

### கவாஸ்கர், சயனின் சிறப்பான செயற்பாட்டால்

# திருமலை கிண்ணியா மத்திய கல்லூரியை இலகுவாக வென்றது சென்.ஜோன்ஸ் கல்லூரி



கவாஸ்கர்



சயன்

(யாழ்ப்பாணம்)

கவாஸ்கர் மற்றும் சயன் ஆகியோரின் சிறப்பான செயற்பாட்டின் மூலம் திருமலை கிண்ணியா மத்திய கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி அணி இலகுவான வெற்றி பெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் இரண்டாவது சுற்று ஆட்டமொன்று நேற்று சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இரு கல்லூரிகளின் 17 வயது அணிகளுக்கிடையில் இப்போட்டி நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென் ஜோன்ஸ் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய கிண்ணியா மத்திய கல்லூரி அணி கவாஸ்கரின் சிறப்பான பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாது மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் 28.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 89 ஓட்டங்களைப் பெற்றது. இதில் றீம்னாஸ் 19, இன்காம் 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சிறப்பாகச் செயற்பட்ட கவாஸ்கர் 14 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். மற்றும் விந்தாகரன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு ஆடிய சென் ஜோன்ஸ் கல்லூரி அணி சயனின் சிறப்பான அதிரடி ஆட்டத்தின் மூலம் இலகுவான வெற்றிபெற்றது.

இறுதியில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி 22.4 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சயன் ஆட்டமிழக்காது 42 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் கௌசிகன் 17 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் அஸ்லாம் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.



3 ஏ மூவீஸ் திரைப்பட தயாரிப்பு நிறுவனத்தினால் பல்வேறு துறைகளிலும் சாதனை நிகழ்த்திய சாதனையாளர்கள் அண்மையில்ட கௌரவிக்கப்பட்டனர். இக்கௌரவிப்பு நிகழ்வில் கடந்த ஆண்டில் விளையாட்டுத் துறையில் சாதனை நிகழ்த்தியமைக்கான விருது அருணோதய பாக் கல்லூரி மாணவி சண்முகராசா தனுசாவுக்கு வழங்கப்பட்டது. இம்மாணவி கோலூன்றிப் பாய்தலில் தேசிய மட்டத்தில் சாதனை புரிந்ததுடன் ஹட்ரிக் வெற்றியாக தேசிய மட்டத்தில் தங்கப் பதக்கம் பெற்றுச் சாதனை படைத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கால்பந்தாட்டம்

(கொழும்பு)

கல்வி அமைச்சு நடத்தும் 2011 ஆம் ஆண்டுக்கான அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி எதிர்வரும் 8,9,10ஆம் திகதிகளில் பதுளை வின்சன் விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இச்சுற்றுப் போட்டிக்கான அனைத்து ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளதாகவும், மாகாண மட்டத்தில் முதல் இரு இடங்களைப் பெற்ற அணிகள் இதில் கலந்து கொள்ளவுள்ளன என்றும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

எனவே, மாகாணத்தில் முதல் இரு இடங்களைப் பெற்ற அணிகளை போட்டி ஆரம்பமாவதற்கு முன்னர் சமூகமளிக்க வேண்டும் என்றும் அவர்களுக்கான தங்குமிட வசதிகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

கிண்ணத்தை வெல்லும் அணிக்கு சென்ற ஆண்டை விட அதிகமான சலுகைகள் வழங்கப்படும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

## அமரர் பிரபாகரன் மென்பந்தாட்டம் காலிறுதிக்கு ஐங்கரா அணி தகுதி

(தும்பளை)

அமரர் பிரபாகரன் ஞாபகார்த்த மென்பந்து கிரிக்கெட் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு கரவெட்டி ஐங்கரா அணி தகுதி பெற்றுள்ளது.

தும்பளை விவேகானந்தா விளையாட்டுக் கழகத்தினால் அமரர் பிரபாகரன் ஞாபகார்த்தமாக 15 ஓவர்களைக் கொண்ட மென்பந்துக் கிரிக்கெட் போட்டியை நடாத்தி வருகின்றது.

விவேகானந்தா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் பருத்தித்துறை ஐக்கிய அணியும், கரவெட்டி ஐங்கரா அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஐக்கியம் அணி 15 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 74 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தீபன் 30, நிசாந்தன் 13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரகு மூன்று, சுதாகர், ஜனா, கபிலன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய கரவெட்டி ஐங்கரா அணி 13.5 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ஜீவன் 45 ஓட்டங்களையும், ஆட்டமிழக்காது ஜனா 12 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் நாகராசா, நிசாந்தன் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

ஐங்கரா அணியின் இந்த வெற்றியின் மூலம் அமரர் பிரபாகரன் ஞாபகார்த்த மென்பந்துத் தொடரில் காலிறுதிக்குத் தகுதி பெற்ற முதல் அணியாகத் திகழ்கின்றது. (62)

## கரப்பந்தாட்டம்

(மன்னார்)

வன்னி மாவட்டத்தில் உள்ள கரப்பந்தாட்ட அணிகள் கலந்து கொள் ளும் நோன்புப் பெருநாள் கரப்பந்து சுற்றுப் போட்டி நேற்றும் இன்றும் மன்னார் முசலி தம்பட்டை முதலியார்கட்டு விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.


வன்னி மாவட்டத்தில் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த 40 அணிகள் இப்போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளன.


இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும், அமைச்சருமான றிசாத் பதியுதீன் கலந்துகொண்டு வெற்றி பெறும் அணிகளுக்கான பரிசில்களை வழங்கி வைப்பார்.

அதேவேளை தம்பட்ட முசலி அணிக்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாருக் தலைமை தாங்கி போட்டியில் விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, போட்டியில் சம்பியனாகும் அணிக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும் என்றும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# இலங்கையுடனான முதலாவது டெஸ்ட் 125 ஓட்டங்களால் வென்றது ஆஸி அணி






(காலி)

இலங்கை அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில், அவுஸ்ரேலிய அணி 125 ஓட்டங்களால் அபாரமான வெற்றிபெற்றது.

இரு அணிகளுக்குமிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி நேற்று காலி மைதானத்தில் நிறைவடைந்தது.

379 ஓட்டங்கள் என்ற இலக்குடன் இரண்டாவது இனிங்சை ஆரம்பித்த இலங்கை அணியின் விக்கெட்டுக்கள் சம இடைவெளியில் அவுஸ்ரேலிய அணியின் வேகப் பந்து வீச்சாளார்களால் வீழ்த்தப்பட்டது.


ஒரு கட்டத்தில் 68 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து தடுமாறிய இலங்கை அணிக்கு, மஹேல ஜெயவர்த்தன மற்றும் மத்தியூஸ் இணை சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கியது. ஆறாவது விக்கெட்டுக்காக இணைந்த இந்த ஜோடி 142 ஓட்டங்களைப் பெற்றது. மிகச் சிறப்பாக ஆடிய இந்த இணையை ஹரீஸ் பிரித்தார். இதனைத் தொடர்ந்து மீண்டும் இலங்கை அணியின் விக்கெட்டுக்கள் சரியத் தொடங்கின. இறுதியில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 253 ஓட்டங்களைப் பெற்று, 125 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. இதில் மஹேல ஜெயவர்த்தன ( 105) 29ஆவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்ததுடன் அதிக சதம் பெற்றோரில் ஆறாவது இடத்தை கிரிக்கெட் பிதா என வர்ணிக்கப்படும் பிரட்மனுடன் பகிர்ந்து கொண்டார்.

மற்றும் மத்தியூஸ் 95 ஓட்டங் களைப் பெற்றார். மற்றைய அனைவரும் ஒற்றை இலக்க ஓட்டத்துடன் ஆட்டமிழந் தனர். பந்து வீச்சில் ஹரிஸ் 62 ஓட்டங் களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக் களைக் கைப்பற்றினார். மற்றும் ஜோன் சன், வட்சன் தலா இரண்டு விக்கெட்டுக் களை வீழ்த்தினர். போட்டியின் ஆட்ட நாயகனாக ஹரிஸ் தெரிவானார்.

அவுஸ்ரேலியா முதல் இனிங்ஸ் 273, இரண்டாவது இனிங்ஸ் 210. இலங்கை அணி முதல் இனிங்ஸ் 105.

## கொரிய உலக தடகளப் போட்டியில்

# மகளிர் 200 மீற்றர் ஓட்டத்தில் ஜமைக்கா வீராங்கனை தங்கம்




200 மீற்றர் ஓட்டத்தில் வெள்ளி, வெண்கலம்



ஈட்டி எறிதலில் தங்கம்


(டெகு)

கொரியாவில் நடைபெற்றுவரும் உலக தடகளப் போட்டிகளில் நேற்று முன்தினம் நடைபெற்ற மகளிர் 200 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் ஜமைக்காவின் வெரோனிகா கேம்பெல் பிரௌன் தங்கப் பதக்கத்தை வென்றார்.

துப்பாக்கி வெடித்த உடன் சட்டென ஓட்டத்தில் பாய்ந்த வெரோனிகா, தொடகத்தில் இருந்து இறுதிவரை முன்னணியில் ஓடி, கடும் போட்டியிலும் வாகை சூடினார்.

பந்தய தூரத்தை 22.22 நொடிகளில் வெரோனிகா கடந்துள்ளார். இவரைத் தொடர்ந்து இரண்டாவது இடத்தைப் பிடித்த அமெரிக்க வீராங்கனை கார்மெலிட்டா ஜீட்டர் 22.37 நொடிகளில் வந்து வெள்ளிப் பதக்கத்தை வென்றார். மிகவும் எதிர்பார்க்கப்பட்ட அலைசன் பெலிக்ஸ் 22.42 நொடிகளில் மூன்றாவதாக வந்து வெண்கலப் பதக்கத்தை வென்றார்.

இதேவேளை, உலக தடகளப் போட்டியில் ஈட்டி எறிதலில் ரஷ்ய வீராங்கனை மரியா அபகுமோவா (71.99 மீற்றர்) தங்கப்பதக்கம் வென்றார். 5000 மீற்றர் ஓட்டத்தில் கென்ய வீராங்கனை



விவியன் ஜெப்கிமோ ஷெரியோட் (14:55.36 வினாடி) தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார். இந்தப் போட்டியில் அவர் வென்ற 2-வது தங்கம் இதுவாகும். அவர் ஏற்கனவே 10 ஆயிரம் மீற்றர் ஓட்டத்திலும் தங்கம் வென்றிருந்தார்.

ஆண்களுக்கான நீளம் தாண்டுதலில் அமெரிக்க வீரர் வைட்ஸ் பிலிப்ஸ் (8.45 மீற்றர்) தங்கப்பதக்கத்தை தட்டிச் சென்றார். உலக தடகளப் போட்டியில் வைட்ஸ பிலிப்ஸ் 4ஆவது முறையாக தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார். இதற்கு முன்பு 2003, 2005, 2009ஆம் ஆண்டுகளில் தங்கம் வென்று இருந்தார். ஆண்களுக்கான குண்டு எறிதலில் ஜெர்மனி வீரர் டேவிட் சோர்ட (21.78 மீற்றர்) தங்கப்பதக்கம் வென்றார்.

## மகனால் பெருமை



எனது மகன் ஏனையவர்களுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்வதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். இதை விட எனக்கு வேறு என்ன வேண் டும் என்று இரண்டு கால்களையும் இழந்து தடகளப் போட்டியில் பங்குபற்றி சாதனை படைத்துவரும் ஆஸ்கரின் தந்தை ஹென்கே தெரிவித்தார்.

11 மாதமான குழந்தைக்கு சத்திர சிகிச்சை என்பது மிகவும் கடினமான அனுபவம். ஆஸ்கரின் பாதிக்கப்பட்ட கால் பகுதியை டாக்டர்கள் அகற்றிய போது எனது நெஞ்சம் வலியால் வெடித்துச் சிதறியது. பின் செயற்கைக் கால்களுடன் ஓடி ஆடி விளையாடினான். பள்ளி செல்லும் போது தான் பிரச்சினை ஆரம்பமானது.

இவனைப் பார்த்த சக மாணவர்கள் கீழே தள்ளி விட்டனர். உடனே குத்துச் சண்டைக்குப் பயன் படுத்தும் "பை" மூலம் பதிலடி கொடுக் கும் வித்தையைக் கற்றுக் கொடுத்தேன்.

அடுத்த முறை அதே சிறுவன் சீண்டிய போது, அவனது சட்டையை ஒரு கையில் பிடித்து, முகத்தில் ஆஸ்கர் ஒரு உதை கொடுத்தான். அதற்குப் பின் ஆஸ்கரிடம் யாரும் வம்பிழுக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

# நட்புறவுக் கால்பந்தாட்டம் வென்றது ஆர்ஜன்டீன அணி



(கொல்கத்தா)

கொல்கத்தாவில் நடந்த நட்புறவு கால் பந்துப் போட்டியில் ஆர்ஜன்டீன அணி வெனிசுலாவை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.

ஆர்ஜன்டீனா-வெனிசுலா கால்பந்து அணிகள் இடையே சர்வதேச நட்புறவு போட்டி கொல்கத்தா சொல்ட் லேக் மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்தது. போட்டியைக் காண சுமார் 80 ஆயிரம் ரசிகர்கள் குழுமியிருந்தனர். ஆர்ஜன்டீன அணியின் புதிய கப்டனும், நட்சத்திர வீரருமான லியோனல் மெஸ்சி மீது தான் அனைவரது பார்வையும் பதிந்திருந்தது. மெஸ்சி...மெஸ்சி... என்ற ஆர்ப்பரிப்பு அரங்கையே அதிரச் செய்தது.


ஆட்டம் தொடங்கியதில் இருந்தே விறுவிறுப்பாக நகர்ந்தது. ஆட்டத்தின் பெரும்பகுதியில் பந்து ஆர்ஜன்டீனாவின் கட்டுப்பாட்டில் இருந்தது என்றாலும், அவ்வப்போது வெனிசுலா வீரர்கள் கோல்கம்பத்தை நெருங்கி, ஆர்ஜன்டீனாவுக்கு நெருக்கடி கொடுத்தனர். எதிர்பார்த்ததை விட வெனிசுலா வீரர்கள் சிறப்பாக ஆடினார்கள்.

வசீகர நாயகன் மெஸ்சி களத்தில் பம்பரமாகச் சுழன்றார். அவரிடம் பந்து வந்தபோதெல்லாம் ரசிகர்கள் உற்சாக குரல் எழுப்பினார்கள். பந்தைக் கடத்திச் செல்வதில் வித்தை காட்டினாலும், அதனை அவரால் கோலாக மாற்ற முடியவில்லை. முதல் பாதியில் இரு அணிகளும் கோல் போடவில்லை.

இதையடுத்து இரண்டாம் பாதியில் ஆர்ஜன்டீனாவின் தாக்குதல் தீவிரமானது. 61ஆவது நிமிடத்தில் மெஸ்சி அடித்த ஒரு பந்து, கோல் கம்பத்திற்கு வெளியே சென்று விட்டது. இதன் பிறகு அவர் மீண்டும் அடித்த ஒரு ஷொட்டை, வெனிசுலா கோல் கீப்பர் தடுத்து விட்டார். இருப்பினும் இதன் மூலம் கார்னர் ஹிக்கிற்கு வாய்ப்பு கிடைத்தது. கார்னர் ஹிக் வாய்ப்பைப் பயன்படுத்தி மெஸ்சி பந்தை உதைக்க, சக நாட்டவரான நிகோலஸ் ஒட்டமென்டி தலையால் முட்டி கோலாக்கினார். 67ஆவது நிமிடத்தில் இந்தக் கோல் விழுந்தது. அதுவே வெற்றிக் கோலாகவும் அமைந்தது. இதன் பிறகு மேற்கொண்டு கோல் ஏதும் அடிக்கப்படவில்லை.

முடிவில் ஆர்ஜன்டீன அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

# 3ஆவது சுற்றில் டோகோவிச், பெடரர்



(நியூயோர்க்)

யு.எஸ். ஓப்பன் ரென்னிஸ் தொடரின் மூன்றாவது சுற்றுக்கு, உலகின் முன்னணி வீரர்களான டோகோவிச், பெடரர் முன்னேறினர்.

இந்த ஆண்டின் கடைசி கிராண்ட்ஸ்லாம் தொடரான, யு.எஸ்., ஓப்பன் ரென்னிஸ் போட்டி அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடக்கிறது. இதன் ஆண்கள் ஒற்றையர் இரண்டாவது சுற்றில், சர்வதேச தரவரிசையில் முதலிடத்திலுள்ள செர்பியாவின் டோகோவிச், ஆர்ஜன்டீனாவின் கார்லோசை சந்தித்தார். இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய டோகோவிச் 6-0, 6-0, 6-2 என்ற நேர் செட்கணக்கில் எளிதாக வென்று, மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு இரண்டாவது சுற்றுப் போட்டியில், சுவிட்சர்லாந்தின் பெடரர், இஸ்ரேலின் டடி செலாவை 6-3, 6-2, 6-2 என்ற செட்கணக்கில் வீழ்த்தினார். முன்னணி வீரர் மான்பில்ஸ் (7வது இடம்), ஸ்பெயினின் பெரீரோவிடம் 6-7, 7-5, 7-6, 4-6, 4-6 என்ற கணக்கில் போராடி வீழ்ந்தார்.

பிற போட்டிகளில் மார்டி பிஷே (அமெரிக்கா), தோமஸ் பெர்டிக் (செக் குடியரசு), டி சொங்கா (பிரான்ஸ்), கிரானலர்ஸ் (ஸ்பெயின்), மரின் சிலிக் (குரோஷியா) உள்ளிட்ட வீரர்கள் வெற்றி பெற்று, மூன்றாவது சுற்றுக்குள் நுழைந்தனர்.

பெண்கள் ஒற்றையர் இரண்டாவது சுற்றுப் போட்டியில் முதல் நிலை வீராங்கனையான டென்மார்க்கின் வோஸ்னியாக்கி, நெதர்லாந்தின் அரன்ட்சாவை எதிர்கொண்டார். இதில் அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்திய வோஸ்னியாக்கி 6-2, 6-0 என, எளிதான வெற்றி பெற்றார்.

மற்றொரு முன்னணி வீராங்கனையான அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், நெதர்லாந்தின் மைக்கேலாவை 6-0, 6-1 என வென்று, மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார். செக்குடியரசின் பெட்ரா காயம் காரணமாக விலகிக்கொண்டதால், இவரை எதிர்த்து விளையாட இருந்த செர்பியாவின் இவானோவிச், நேரடியாக மூன்றாவது சுற்றுக்குள் நுழைந்தார்.

பிற போட்டிகளில் ஜான்கோவிச் (செர்பியா), அசரென்கா (பெலாரஸ்), ஷியாவோனே (இத்தாலி), கஸ்னட்சோவா (ரஷ்யா) ஆகியோர் வெற்றி பெற்று, அடுத்த சுற்றுக்கு முன்னேறினர்.

# ஹுசைன் மன்னிப்புக் கேட்கவேண்டும் பி.சி.சியின் துணைத் தலைவர் கோரிக்கை

(புதுடில்லி)

நசார் ஹுசைன் தெரிவித்த கருத்திற்காக மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று இந்திய கிரிக்கெட் சபை துணைத்தலைவர் ராஜீவ் சுக்லா மற்றும் முன்னாள் அணித் தலைவர் முகமது அசாருதீன் வலியுறுத்தியுள்ளனர். இது குறித்து இந்திய கிரிக்கெட் சபைத் துணைத் தலைவர் ராஜீவ் சுக்லா தெரிவிக்கையில், நாசர் ஹுசைனின் கருத்து முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. வீரர்களைப் பற்றி விமர்சிக்கும் போது தங்கள் வார்த்தைகளை உணர்ந்து கட்டுப்பாடுடன் பேச வேண்டும். ஒரு வர்ணனையாளர் என்ற முறையில் இது போன்ற வார்த்தைகளை வர்ணனையில் அவர்கள் பயன்படுத்தக் கூடாது. எனவே நாங்கள் இந்த விமர்சனத்தைப் பற்றி கவனத்தில் கொள்வோம். வீரர்களின் செயற்பாடு களத்தில் எப்படி இருந்தாலும் அவர்களுக்கு மரியாதை அளிக்கப்பட வேண்டியது அவசியம். நசார் ஹுசைனின் இந்த வர்ணனை சரியானது அல்ல என்பதே எனது கருத்து என்றார். இந்திய முன்னாள் கப்டன் முகமது அசாருதீன் கூறுகையில், நசார் ஹுசைன் இங்கிலாந்து அணிக்கு கப்டனாக இருந்தவர். அவர் இப்படிக் கூறியிருக்கக்கூடாது. வீரர்களை விமர்சிக்க எவ்வளவோ வழிகள் உள்ளன. வீரர்களை கழுதைகள் என்று வர்ணித்தது, அவரது அந்தஸ்துக்கு தகுதியுடையது அல்ல. தனது கருத்துக்கு அவர் இந்திய அணியிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றார்.

# பாகிஸ்தான் நிதான ஆட்டம்

(லவாயோ)


சிம்பாப்வே அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் முடிவில் பாகிஸ்தான் அணி ஒரு விக்கெட்டை இழந்து 116 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

பாகிஸ்தான் - சிம்பாப்வே அணிகள் இடையே டெஸ்ட் கிரிக்கெட் போட்டி புலவாயோ நகரில் நடந்து வருகிறது.

இதில் இரண்டாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த சிம்பாப்வே அணி அதன் முதல் இன்னிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 412 ஓட்டங்களைப் பெற்றது. இதில் முதலாவது சதத்தை நிறைவு செய்த ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் டினோ மவோயோ 163 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார். பந்து வீச்சில் சயிட் அஜ்மல், சீமா தலா நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு முதல் இனிங்சிற்காக ஆடி வரும் பாகிஸ்தான் அணி போட்டியின் இரண்டாம் நாள் நிறைவுக்கு வந்த வேளை, தனது முதல் இன்னிங்சை ஆடிய பாகிஸ்தான் அணி ஒரு விக்கெட்டை இழந்து 116 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.


வலுவான பாகிஸ்தான் அணிக்கு எதிரான சதம் பெற்றது மகிழ்ச்சி. சிறப்பான ஆட்டத்தைத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்வது என்பது கடினமான காரியம் என்று சதம் பெற்ற சிம்பாப்வே வீரர், டினோ மவோயோ ஊடகவியலாளர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.



டினோ மவோயோ

# நாட்டின் அபிவிருத்தியே அனைவரினதும் இறுதி எதிர்பார்ப்பாக இருக்க வேண்டும்

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ



(கொழும்பு)

பல வருடங்களுக்குப் பின்னர் பெற்றுக் கொண்ட சுதந்திரத்தின் ஊடாக முழுமையான பயனைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகள் தொடர்பில் தெளிவுபடுத்துவதற்காக அலரிமாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

சவால்களை ஏற்றுக்கொண்டு முன்னேறிச் செல்லவேண்டும். நாட்டின் அபிவிருத்தியே அனைவரினதும் இறுதி எதிர்பார்ப்பாக அமைய வேண்டும்.

சவால்களினூடாகச் செல்லும் பயணத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவது அனைத்து பிரஜைகளினதும் கடமையாகும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, 2018ஆம் ஆண்டின் பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளை இலங்கையில் நடத்துவது தொடர்பில் தற்போது பல நாடுகள் ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாக இதன்போது கருத்து வெளியிட்ட விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

# ரொமேஷ் சானக்கவின் மரணம் குறித்து உண்மையைச் சுட்டிக்காட்ட வலியுறுத்து



(கொழும்பு)

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய ஊழியர்களின் எதிர்ப்பு நடவடிக்கையின் போது உயிரிழந்த ரொமேஷ் சானக்கவின் மரணத்திற்கான காரணத்தை நேர்மையாகவும், நியாயமாகவும் ஆராய்ந்து உண்மையைச் சுட்டிக்காட்டுமாறு இலங்கை கத்தோலிக்க ஆயர்களின் சம்மேளனம் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சானக்கவின் குடும்பத்தினர் இந்த மரணம் தொடர்பில் அறிந்து கொள்வதில் ஆர்வத்துடன் இருப்பதாக, சம்மேளனத்தின் தலைவரான கொழும்பு மறைமாவட்ட பேராயர் கர்தினால் வணக்கத்திற்குரிய மல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் பொதுச் செயலாளரான அனுராதபுர மறைமாவட்ட ஆயர் வணக்கத்திற்குரிய நோபேட் எம்.அன்ராடி ஆண்டகை ஆகியோரினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி இடம்பெற்ற இலங்கை கத்தோலிக்க ஆயர்களின் சம்மேளனத்தின் கூட்டத்தொடரில் ரொமேஷ் சானக்கவின் மரணம் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கையை மீளவும் கட்டியெழுப்ப ஒத்துழைப்பு வழங்குவதற்குத் தயார்

## தென்கொரியா அறிவிப்பு

தென்கொரியப் பிரதமருடன் அமைச்சர் பீரிஸ்



(கொழும்பு)

யுத்தத்திற்கு பின்பு இலங்கையை மீண்டும் கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் தொடர்பில் மிகவும் நெருங்கிய ஒத்துழைப்பை வழங்கவுள்ளதாகத் தென்கொரியா தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் தென்கொரிய தலைநகரம் சியோலில் வெளிநாட்டு அமைச்சர் ஜி.எல்.பீரிஸிற்கும் தென்கொரிய வெளிநாட்டு அமைச்சர் சுங்ஹ வானுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே தென்கொரிய வெளிநாட்டமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விசேடமாக வடக்கிலும் கிழக்கிலும் மேற்கொள்ளப்படும் வலுசக்தி மற்றும் நீர்பாசனத் துறை அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என வெளிநாட்டமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கொரிய நாட்டு முதலீட்டாளருக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

தென் கொரிய வெளிநாட்டமைச்சர் இலங்கை மேற்கொள்ளும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மேலும் நன்கொடைகளை வழங்குவோம் எனத் தெரிவித்துளளார்.

அந்நாட்டுப் பிரதமர் ஹிவாங் சிக், வெளிநாட்டு அமைச்சர் ஜி.எல்.பீரிசுக்குமிடையில் கலந்துரையாடல் ஒன்றும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## காணாமற்போன இருவர் குறித்து

### இதுவரையும் தகவல் இல்லை

(கொழும்பு)

இந்தியாவுக்கான யாத்திரையை மேற்கொண்டிருந்த போது புதுடில்லியில் வைத்து காணாமற்போன இரண்டு இலங்கையர் தொடர்பில் இதுவரை எவ்வித தகவலும் இல்லையென இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

காணாமற்போன இருவரையும் கண்டுபிடிப்பதற்காக இரண்டு குழுக்கள் தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதாக இந்தியாவுக்கான இலங்கைப் பிரதி உயர்ஸ்தானிகர் பாலித்த கனேகொட தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கான யாத்திரை மேற்கொண்டிருந்த இலங்கையர் மூவர் கடந்த 29 ஆம் திகதி காணாமற்போயிருந்தனர். இவர்களில் ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கட்சிகளுக்கு சாதகமான நிகழ்ச்சிகளுக்கு தேர்தல் பிரசார முடிவுகளின் பின் தடை

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர் வேட்பாளர்களுக்கும், கட்சிகளுக்கும் சாதகமான அனைத்து நிகழ்ச்சிகளும் தேர்தல் ஆணையாளரால் தடை செய்யப்பட்டுள்ளது.இதற்கு முன்னர் நடைபெற்ற தேர்தல்களின் போது கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை கருத்திற்கொண்டு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கான கால எல்லை நிறைவடைந்ததன் பின்னர் சில வேட்பாளர்கள் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்காக இசை நிகழ்ச்சிகள், தானங்கள், பாராட்டு நிகழ்வுகள் போன்ற வைபவங்களை ஏற்பாடு செய்கின்றனர் இவைகளை மேற்கொள்ளத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கட்சிகளின் செயலாளர்களுக்கும் தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கும் பொலிஸாருக்கும் விசேட சுற்று நிருபத்தின் ஊடாக தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அனைத்துப் பிரசார நடவடிக்கைகளும் ஒக்ரோபர் மாதம் 5 ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தரமற்ற சிமெந்து விநியோகம் இறுதிக் கட்டத்தில் விசாரணைகள்

(கொழும்பு)

தேசிய கூட்டுறவுச் சங்கத்தினால் பாகிஸ்தானில் இருந்து கொண்டுவரப்பட்ட சிமெந்துக்கான தரச்சான்றிதழை பெற்றுக்கொள்வதற்கு முன்னர் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணை இறுதிக் கட்டத்திற்கு வந்துள்ளதாக இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவிக்கிறது.

குறித்த விசாரணை அறிக்கைக்கு அமைய அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என இலங்கை சுங்கத் திணைக்களத்தின் பொருட்கள் ஆய்வுப் பிரிவின் பணிப்பாளர் எஸ்.டி.எஸ்.குணதுங்க தெரிவித்தார். அதன் உற்பத்தி நிறுவனத்தின் தர அறிக்கை தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த நிலையில் தேசிய கூட்டுறவுச் சங்கம் குறித்த சிமெந்தை இறக்குமதி செய்துள்ளது.

சிமெந்தை சந்தைக்கு விநியோகிப்பதற்கான தர அறிக்கை கட்டாயமானது என்பதோடு குறித்த சிமெந்து அந்த அறிக்கை கிடைக்கு முன்னரே சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. தர அறிக்கை கிடைக்கும் வரையில் களஞ்சியப்படுத்தி வைப்பதற்காக துறைமுகத்தில் இருந்து கூட்டுறவுச் சங்கத்திற்கு வெளியேற்றப்பட்ட சிமெந்தே விநியோகிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த சிமெந்தை பலவந்தமாக சங்கத்திடம் இருந்து பெற்றுக் கொள்ளவில்லை என கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# அரசுக்கு நெருக்கமானவர்களால் சண்டேலீடர் வாரஇதழ் கொள்வனவு?

(கொழும்பு)

நாட்டின் முன்னணி வார இதழ்களில் ஒன்றான சண்டே லீடர் பத்திரிகையை அரசாங்கத்திற்கு நெருக்கமானவர்கள் கொள்வனவு செய்யவுள்ளதாக சிங்கள இணைய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

375 மில்லியன் ரூபாவிற்கு சண்டே லீடர் பத்திரிகை விற்பனை செய்யப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஜனாதிபதி குடும்பத்தினருக்கு மிகவும் நெருக்கமான அசங்கா செனவிரட்னவினால் குறித்த பத்திரிகை கொள்வனவு செய்யப்பட உள்ளதாக இணைய ஊடகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளைக் கொடி வழக்கு சம்பவத்தைத் தொடர்ந்து சண்டே லீடர் பத்திரிக்கைக்கு மக்கள் மத்தியில் இருந்த அபிமானம் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும், பாரிய நிதி நெருக்கடியை எதிர்நோக்கி வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சண்டே லீடர் பத்திரிகையின் 75 வீதமான பங்குகளை அசங்க செனவிரட்ன கொள்வனவு செய்துள்ளதாகவும், இதற்கான பணத்தை அரச வங்கியொன்றில் அவர் கடனாகப் பெற்றுக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பத்திரிகையின் பெயரை மாற்றுவதற்கும் ஆசிரியர் பீடத்தை மாற்றுவதற்கும் முயற்சி எடுக்கப்பட்டு வருவதாகவும குறிப்பிடப்படுகிறது.

# பணிக்காலம் முடிந்தும் கொரியாவிலுள்ள இலங்கையர்களுக்கு எதிராக நடவடிக்கை

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் கொரியாவில் தங்கியுள்ள இலங்கையர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணிமனை இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

இது தொடர்பாகத் தெரிவித்த பணிமனையின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க, தொழிலுக்கான ஒப்பந்த காலம் நிறைவடைந்த பின்னரும், பல இலங்கையர்கள் கொரியாவில் தங்கியுள்ளனர். இது தொடர்பிலான தகவல்கள் எமக்குக் கிடைத்துள்ளன.

அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அவர்கள் அவ்வாறு தொடர்ந்து கொரியாவில் தங்கி இருப்பதால், புதிய வேலைவாய்ப்புகளுக்காக இலங்கையர்களை அனுப்பி வைக்க முடியாது இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# டெங்குக் காய்ச்சலால் 124 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் டெங்குக் காய்ச்சலால் 124 பேர் உயிரிழந்துள்ளதுடன், 16 ஆயிரத்து 660 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு தெரிவித்தது. கொழும்பு மாவட்டத்தில் அதிகபடியாக ஆயிரத்து 660 பேர் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் கம்பஹா மாவட்டத்தில் 602 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 909 பேரும் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதாக ஆய்வுப் பிரிவு தெரிவித்தது.


# வடமாகாணத்திலும் அறிமுகமாகின்றது காணி உரித்துப் பதிவுச் சான்றிதழ் திட்டம்

(கொழும்பு)

அரசினால் நடைமுறைப்படுத்தப்படும் மண்ணின் மகிமை - காணி உரித்துப்பதிவுச் சான்றிதழ் வழங்கும் திட்டமானது வட மாகாணத்திலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் சகல காணித்துண்டுகளுக்குமாக வரைபடம் நில அளவைத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு காணித்துண்டுக்கும் தனியான அடையாள இலக்கம் வழங்கப்படும்.குறித்த காணித்துண்டுக்கான உரிமையாளரை ஓர் விசாரணையின் பின் தீர்மானித்து அவருக்கு காணியின் உரிமையைப் பதிவு செய்து அரச உத்தரவாதத்துடன் ஓர் உரித்து பதிவுச் சான்றிதழ் வழங்கப்படும்.

இது தவிர ஏனைய மீள் குடியேற்றம் செய்யப்பட்ட பிரதேசங்களில் காணப்படுகின்ற காணிப்பிரச்சனைகளைத் தீர்த்து




வைத்தல் தொடர்பாக காணி ஆனைணயாளர் நாயகத்தினால் சுற்று நிருபம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. இதற்கான விண்ணப்பப் படிவங்களையும் உரிய பிரதேச செயலகங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

முதற் கட்டமாக வடமாகாணத்தில் காணி உரித்து வழங்குவதற்காக நல்லூர், கரைச்சி, முசலி, கரை துறைப்பற்று, வவுனியா வடக்கு ஆகிய பிரதேச செயலகங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் காணி உரித்தை பதிவு செய்து அரச உத்தரவாதத்துடன் வழங்கப்படும் உரித்துச் சான்றிதழை பெற்றுக்கொள்வதற்காக கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலகம், மாகாண காணி நிர்வாகத்திணைக்களம் ஆகியவற்றுடன் தொடர்பு கொள்வதுடன் www.bimsaviya.gov.lk இணையத்தளம் npland@sltnet.lk அல்லது T.P :- 021-2220836, 021-3215539 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.

## விடைத்தாள்கள் மீள ஒப்படைப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களின் விடைத்தாள்கள் திருத்தப்பட்டதன் பின்னர் அவற்றை மாணவர்களிடம் கையளிக்க உயர் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்தத் தகவலை, உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்தார்.

பல்கலைக்கழக உப வேந்தர்கள் இதற்கான விருப்பத்தினை வெளியிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விடைத்தாள்களை திருத்தும்போது, சில விரிவுரையாளர்கள் உரிய வகையில் திருத்தும் பணிகளை மேற்கொள்வதில்லை என மாணவர்கள் முறையிட்டதாக அவர் குறிப்பிட்டார்.

மாணவர்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை அடுத்து இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க மேலும் தெரிவித்தார்.

## வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு குத்தகைக்கே காணிகள் வழங்கப்படும்

### லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன



(கொழும்பு)

எதிர்காலத்தில் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு காணிகளை விற்பனை செய்யப் போவதில்லை எனவும் 30 வருடங்களுக்கு மாத்திரம் காணிகளை குத்தகைக்கு கொடுப்பது எனவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எதிர்காலத்தில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு குத்தகைக்கு மாத்திரமே காணிகளை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு நகரில் சுற்றுலா விடுதிகள் மற்றும் உலக வர்த்தக மையம் என்பவற்றை நிர்மாணிக்க குத்தகை அடிப்படையிலேயே அரச காணிகள் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இவற்றில் இருந்து குறைந்த வருமானமே அரசாங்கத்திற்கு கிடைத்து வருகிறது எனவும் பிரதியமைச்சர் கூறியுள்ளார்.

## பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ள சந்தேக நபர்களின் நடமாட்டம்!

### சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் சந்தேகத்திற்கு இடமானவர்களின் நடமாட்டம் அதிகரித்திருப்பதனால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கிறீஸ் பூதங்கள் என்று சொல்லப்படும் இந்த மர்ம நபர்களின் தொல்லை காரணமாக ஆண்கள் இரவு முழுவதும் கண்விழித்திருக்க வேண்டியுள்ளது. இதனால் அவர்கள் பகல் வேளைகளில் வேலைக்குச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

மக்கள் மாலை 6 மணியுடன் வீடுகளில் முடங்கிவிடுவதுடன், அச்சம் பீதி காரணமாக கிராமங்களில் ஒரே இடத்தில் பெண்களும் குழந்தைகளும் இரவைக் கழிப்பதாகத் தெரிவிக்கப்படு



கின்றது.

அங்கு பதட்டம் ஏற்பட்டிருப்பதாகவும் மக்கள் அச்சத்தில் உறைந்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

ஊருக்குள் வருகின்ற மர்ம மனிதர்களைக் கண்டதும், அவர்களைப் பிடிப்பதறகாகப் பொது மக்கள் ஒன்றுகூடி துரத்திச் செல்கின்றபோது, அங்கு வருகின்ற படையினர் மர்ம மனிதர்களைப் பிடிப்பதற்குப் பதிலாகப் பொதுமக்களையே கண்மூடித்தனமாகத் தாக்குகின்றனர்.

மர்ம மனிதர்களுக்கும் இராணுவத்தினருக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதாகப் பொதுமக்கள் தன்னிடம் தெரிவித்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த மர்ம மனிதர்கள் விவகாரம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்திருக்கின்றது.

இந்த விடயத்தில் பாராமுகமாக இருக்கின்ற அரசாங்கத்தின் போக்குக்குறித்து சர்வதேச சமூகத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கும் நடவடிக்கைகள் எடுக் கப்பட்டிருப்பதாக சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறினார்.

## பெண்கள் ஏமாற்றப்படுவதைத் தடுக்க அறிமுகமாகிறது புதிய சட்டதிட்டங்கள்



(கொழும்பு)

பெண்களை ஏமாற்றி வியாபார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

இவர்களுக்கு எதிராக புதிய சட்ட திட்டங்கள் விரைவில் உருவாக்கப்படவுள்ளதாக சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமூகத்தில் பல்வேறுபட்ட காரணங்களால் உளரீதியில் பாதிப்புக்குள்ளாகியும், அப் பாதிப்புக்களினால் நோய் வாய்ப்பட்டுமுள்ள அதிகளவான எண்ணிக்கை கொண்ட தரப்பினர் பெண்களேயாவர்.


மேலும் அண்மைக்காலமாக பெண்களை மந்திர தந்திரங்களால் ஏமாற்றி வரும் சம்பவங்களும் அதிகரித்து வருவதாக பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இத்தகைய ஏமாற்று மோசடிக்காரர்களின் வலையில் சிக்கி பெண்கள் சீரழிவதுடன் அவர்களது எதிர்காலமும் பாதிக்கப்படுகின்றது.

தமது சோகங்களைக் கூறி உதவி வேண்டி வரும் அப்பாவிப் பெண்களை ஏமாற்றிப் பணம் பறிக்கும் அதேவேளை, பாலியல் வன்முறைகளை மேற்கொள்ளும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன.

இத்தகைய மோசடிப் பேர்வழிகளை அடையாளம் காணவும் பாதிக்கப்பட்ட அப்பாவிப் பெண்களுக்கு சட்டரீதியிலான நடவடிக்கைகள் எடுக்கவும் புதிய சட்ட திட்டங்களை உருவாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகவும், இதன் மூலம் இவ்வாறான செயல்களில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## வன்னியிலுள்ள வைத்தியசாலைகளுக்கு மூன்று டபிள்கப் வாகனங்கள் கையளிப்பு



(வவுனியா)

மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையை சேர்ந்த மனநல சுகாதார உத்தியோகத்தர்களுக்கு வேள்விசன் லங்கா நிறுவனத்தால் மூன்று டபிள்கப் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வவுனியா உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் கடந்த 29ஆம் திகதி இடம்பெற்ற இந்நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி வாகனங்களைக் கையளித்தார்.

மனநல சுகாதார உத்தியோகத்தர்கள் வன்னிமாவட்டத்தின் கிராமப்புறங்களுக்குச் சென்று அங்குள்ள மனநிலை பாதிக்கப்பட்ட மக்களுக்கு விசேட மருத்துவ முகாம்களை நடத்துவதுடன் அவர்களை வைத்திய சிகிச்சைக்காக பொது வைத்தியசாலைக்கு கொண்டுவர நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என ஆளுநர் கேட்டுக்கொண்டார்.

சமூக உதவி உத்தியோகத்தர்கள் மூலம் எல்லை கடந்த மருத்துவ முகாம்களை நடத்தல், பாதிக்கப்பட்ட மக்களை இனம் காணல் போன்ற சிறந்த திட்டங்களை உள்ளடக்கி செயற்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளதாக ஆளுநர் பாராட்டுத் தெரிவித்தார். உரிய நேரத்தில் இச்செயற்திட்டத்தை நடாத்த உதவிய வேள்ட் விசன் லங்கா மற்றும் சர்வதேச அபிவிருத்திக்கான அவுஸ்ரேலிய நிறுவனங்களுக்கும் ஆளுநர் தனது நன்றியினைத் தெரிவித்தார்.

மீள்உளவளர்ச்சி செயற்திட்டத்தின் வேள்ட் விசன் லங்கா நிறுவன செயற்திட்ட முகாமையாளர் ஜே.எம்.கித் பலட் அசோரன்ட், வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை வைத்திய அதிகாரி வைத்தியர். ரி.சத்தியமூர்த்தி ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# சொனியின் அறிமுகம்



சந்தையில் லப்ரொப் கணினிகளுக்கான கேள்வியை தொழில்நுட்ப நிறுவனங்கள் நன்கு அறிந்துவைத்துள்ளன. இதற்கு ஈடு கொடுக்கும் வகையில் நிறுவனங்கள் பல்வேறு வசதிகளுடன் கூடிய லப்ரொப் கணினிகளை நாளுககு நாள் அறிமுகப் படுத்தி வருகின்றன. அப்பிள், சம்சுங், எச்.பி, பிளக்பெரி என பல வேறு நிறுவனங்களை இதற்கு உதாரணமா கக் கூறலாம். தற்போது அவ் வரிசையில் தன்னையும் இணைத்துக் கொண்டுள்ளது 'சொனி'. சொனி இரண்டு லப்ரொப் கணினிகளை அறிமுகப்படுத்தியது. லப்ரொப் பி மற்றும் லப்ரொப் எஸ் என அவை பெயரிடப்பட்டுள்ளன. இவை இரண்டும் கூகுளின் அண்ட்ரோய்டின் புதிய வேர்ஷனான 'ஹனிகோம்' ஐ அடிப்படையாகக் கொண்டு இயங்குபவை. இதில் 'பி' இன் வடிவம் லப்ரொப் சந்தைக்கு புதியது. இது இரண்டு திரைகளைக் கொண்டுள்ளதுடன் மடித்து வைத்துக் கொள்ள முடிவதனால் எடுத்துச் செல்ல இலகுவாக இருக்குமென சொனி தெரிவிக்கின்றது. நவம்பர் மாதம் வெளியாகவுள்ளது. சந்தையில் முன்னணியில் இருக்கும் அப்பிள் லப்ரொப்களுக்கு இவை தகுந்த போட்டியளிக்குமா என பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

# வேற்றுக் கிரகவாசிகளால் துன்புறுத்தப்படும் பெண்கள்?



அண்மைக்காலங்களாக ஏலியன்கள் பற்றிய சர்ச்சை அதிகரித்துக்கொண்டே போய்க் கொண்டிருக்கிறது. ஏலியன்கள் பற்றி இறுதியாக பிரேசில் நாட்டில் பறக்கும் தட்டில் வந்திறங்கிய சில ஏலியன்கள் பனிப்பகுதிக்குள் கால்பதித்து நடந்து சென்றதாக காணொளியுடன் வெளியாகிய செய்தியின் பரபரப்பு அடங்குவதற்கு முன்னர் இன்னுமொரு பீதியைக்கிளப்பும் செய்தி வெளியாகியுள்ளது. இத்தாலியைச் சேர்ந்த Gennargentu, Sardinia பகுதியைச்சேர்ந்த 40 வயதான Giovanna Podda எனும் யுவதி தன்னை வேற்றுக்கிரகவாசி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி விட்டதாகப் பரபரப்புத் தகவலை வெளியிட்டுள்ளார். இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, குறித்த பெண் தன்னை பொஸ்பரஸ் தீக்காயங்களுடனான வேற்றுக்கிரகவாசி ஒருவர் கடத்தி சென்று பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதாக இத்தாலிய தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றுக்கு பேட்டி அளித்துள்ளார். இச்சம்பவம் தொடர்பில் நான் பொலிஸாரிடம் முறைப்பாடு தெரிவித்ததும் அவர்கள் என்னைப் பார்த்து கேவலமாக சிரிக்கிறார்கள். இந்தச் சம்பவம் பற்றி யாரும் நம்புவதாக இல்லை. ஆனால் எனக்கு மட்டும் ...ரியும். நான் மட்டுமல்ல இவ்வாறான ஏராளமான பெண்கள் ஏலயன்களால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தபபடுவதாகக் கூறிய அவர் இது பற்றி அந்தப் பெணகள் வெளியில சொல்ல வெட்கப்படுவதாகவும் குறிப்பிட்டுள் ளார்.

# சாதனைக்கு காத்திருப்பு



2030 ஆம் ஆண்டு ஒரு பெரிய சாதனை ஒன்றுக்காக நாசா காத்திருக்கிறது. அமெரிக்காவின் விணவெளி கழகமான நாசா செவ்வாய்க் கிரகத்திற்கு முதன்முதலாக விண்வெளி வீரர்களுடன் கூடிய விண்கலத்தை அனுப்பத் திட்டமிட்டுள்ளது. செவ்வாய்க் கிரகத்தில் மேற்கொள்ளப்படும் இந்த 5 வருட ஆராய்ச்சி பணியில் ஏறக்குறைய ஒருவருக்கு 3 ஆயிரத்து 175 கிலோ கிராம் உணவு தேவைப்படும். இந்த நிலையில், அவர்களுக்கு தொடர்ந்து உணவு அனுப்புவது தமது திட்டப்பணிகளில் சவாலான ஒரு விடயமாகும் உணவுக்குத் தேவையான கரட், தக்காளி உட்பட்ட 10 வகையான செடிகள் கொண்ட மரக்கறித் தோட்டம் ஒன்றை செவ்வாய்க் கிரக சூழலுக்கேற்ப அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. விண்கலத்தில் இதனை வளர்க்க குறைந்த இடமே போதுமானதாக இருக்கும் அத்துடன் ஆரோக்கியமான உணவினை பெற்றுக்கொள்வதன் பொருட்டு செவ்வாய்க் கிரகத்திலேயே தோட்டத்தை அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

# எதிரியை பழிவாங்க

_ உங்களுக்கு யாராச்சும் எதிரிகள் இருக்கிறார்களா? அவர்களை நேருக்கு நேர் பழிவாங்க முடியாமல் உள்ளதா? பரவாயில்லை விடுங்கள் பழிவாங்கும் எண்ணம் கூடாதுதான். இருந்தாலும் உங்கள் மனத் திருப்திக்காக அவர்களை பழிவாங்க ஒரு வழி இருக்கிறது இதற்கு அவர்களின் புகைப்படம் இருந்தால் போதுமானது உங்கள் எதிரியை நீங்கள் ஒரு பேயை விட கேவலமாக அசிங்கப்படுத்தி சந்தோசப்பட்டுக் கொள்ளுங்கள்.

முதலில் நாம் தந்துள்ள தளத்திற்கு சென்று உங்கள் தெரிவான புகைப்படத்தை தேர்ந்தெடுத்து விளையாட ஆரம்பியுங்கள். உங்கள் எதிரியின் அழகான புகைப்படம் கேவலமானதை இட்டு சந்தோசப்படுங்கள். முடிந்தால் அவருக்கே அனுப்பி விடுங்கள். இடிவாங்காமல் இருந்தால் சரிதான்.

தரவிறங்க:- http://dsc.discovery.com/sharks/shark-yourself/

# காதலுக்கான தூரம்



காதலுக்காக 1000 மைல்கள் தூரத்தை நடந்து கடக்கத் துணிந்துவிட்டார் இந்த காதல் மன்னன்.

சீனாவைச் சேர்ந்த லியூபிவின் எனும் 29 வயது ஆண் ஒருவர் 23 வயதாகும் லிங் சூ எனும் பெண்ணை தீவிரமாக காதலித்தார். அவரது காதலை அவளிடம் சொல்லியபோது அவள் விளையாட்டாக '1000 மைல்கள் கால்நடையாக வந்து என்னிடம் உனது காதலை சொன்னால் ஏற்றுக்கொள்கிறேன்' என்றாள். உடனே காரியத்தில் இறங்கிவிட்டார் லியூ பிவின் காதலி இருக்கும் தென்கிழக்கு சீனாவில் இருந்து அண்ணளவாக 1000 மைல் தொலைவில் இருக்கும் குவாங்டொங் மாகாணத்தில் இருந்து தனது நடைப்பயணத்தை தொடங்கிவிட்டார். தற்பொழுது 500 மைல்களுக்கு மேல் தாண்டிய நிலையில் தனது முயற்சியில் மிகவும் தீவிரமாக இருக்கிறார்.



# படித்தவுடன் மறைந்துவிடும்

மின்னஞ்சல் முகவரியை மறைத்து அனுப்ப வேண்டிய தேவை ஏற்படுவது போல மின்னஞ்சல் செய்தியையே ரகசியமாக அனுப்ப வேண்டிய தேவை ஏற்படுமா என்று தெரியவில்லை. அதாவது நீங்கள் அனுப்பும் மின்னஞ்சல் செய்தியை தாக்காளர் யாராவது இடைமறித்து படித்து விடக்கூடும் என்ற அச்சம் இருந்தால் மின்னஞ்சல் வாசகங்களை யாரும் படித்து விட முடியாத வகையில் ரகசியமாக அனுப்பி வைக்க நினைத்தால் பிரைவ் நோட் இணையத்தளம் அதற்காகவே காத்திருக்கிறது. இந்தத் தளத்தில் ரகசியமாக அனுப்ப வேண்டிய தகவலை ரைப் செய்தால் அதற்கான இணைய முகவரி ஒன்றை தருகிறது.

யாருக்கு மின்னஞ்சல் சென்று சேர வேண்டுமோ அவருக்கு இந்த இணைய முகவரியை மட்டும் அனுப்பி வைக்கலாம்.

மின்னஞ்சல் வழியே அல்லது மெசேஜிங் மூலம் இந்த ரகசிய குறியீட்டு முகவரியை அனுப்பலாம். இதனைப் பெறுபவர் மட்டுமே அதனை கிளிக் செய்து படிக்க முடியும். அவரும் கூட ஒரே ஒரு முறை தான் இந்தச் செய்தியைப் படிக்க முடியும். காரணம் அவர் படித்து முடித்தபிறகு இந்தச் செய்தி காணாமற் போய்விடும். அதாவது தன்னை தானே அழித்துக் கொண்டுவிடும்.

எனவே யாருக்கு அனுப்பப்பட்டதோ அவரை தவிர யாரும் இந்தச் செய்தியை படித்துவிட முடியாது. இந்த அளவுக்கு மிகவும் ரகசியமான மின்னஞ்சல் அனுப்பும் அவசியம் ஏற்படுகிறதோ இல்லையோ இப்படி படித்தவுடன் மறைந்து விடும் மின்னஞ்சல் சேவையை சுவாரஸ்யம் கருதி பயன் படுத்தலாம்.

தரவிறங்க சுட்டி:- https://privnote.com/

கணினி மூலை

# பண மழை




நெதர்லாந்தில் வீதியால் பரிமாற்றத்துக்காக பணம் கொண்டு செல்கையில் ஏற்பட்ட தவறு காரணமாக பணம் மழையாக பொழிந்தது. நெதர்லாந்தில் தெற்கு லிம்பெர்க் மாகாணத்தில் எல்ஸ்லூநகரில் உள்ள பெருந்தெரு ஒன்றால் பாரிய கொன்ரெய்னர் லொறி மூலம் யூரோ நாணயத் தாள்கள் பரிமாற்றத்துக்காக கொண்டு செல்லப்பட்டது. அதன்போது தவறுதலாக கொன்டெய்னரின் கதவு திறந்து கொள்ள, உள்ளிருந்த பணம் காற்றில் கிளம்பி, தெருவில் மழைபோல் பொழிந்தது. வீதியால் சென்றுகொண்டிருந்தவர்கள் அப்படி அப்படியே வாகனங்களை நிறுத்திவிட்டு பணம் பொறுக்குவதில் மும்முரமானார்கள். தெரு முழுவதும் பணம் நிறைந்து காணப்பட்டது. 10, 20 மற்றும் 50 யூரோ நாணயத் தாள்களே இவ்வாறு வீணாக்கப்பட்டன. இது பற்றி அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியொருவர் தொலைக்காட்சிக்கு வழங்கிய செவ்வியில், மேற்படி தொலைந்து போன நாணயங்கள் செல்லுபடியற்றனவாக்கப்பட இருப்பதாக தெரிவித்தார். எனவே பொறுக்கியும் பிரயோசனமற்றுப் போய்விட்டதே.



# காஷ்மீர் எவருக்கும் சொந்தமில்லை முஷாரப்புடன் மன்மோகன் உடன்பாடு

## விக்கிலீக்ஸ் தகவல்




(புதுடில்லி)

காஷ்மீர் விவகாரத்தில் முஷாரப் ஆட்சியில் இருந்த நேரத்தில் இந்தியா- பாகிஸ்தான் இடையில் நல்லதொரு முன்னேற்றம் காணப்பட்டு முக்கிய தருணத்தை அடைய முடிந்தது என பிரதமர் மன்மோகன்சிங் கூறியதாக விக்கிலீக்ஸ் இணையதளம் தகவல் வெளியிட்டுள்ளது.

அந்த தகவலில்

கடந்த ஏப்ரல் மாதம் 2008 ல் அமெரிக்க வெளியுறவுத் துறை குழுத் தலைவர் ஹாவர்டு பெர்மன் தலைமையில் குழு ஒன்று இந்தியா சென்றிருந்தது. இந்த குழுவினரிடம் பிரதமர் மன்மோகன்சிங் கூறுகையில்

காஷ்மீர விவகாரத்தில் 2007ல் முஷாரப் பதவியில் இருந்த போது நல்லதொரு முடிவை எட்டினோம். காஷ்மீர் பகுதி யாருக்கும் சொந்தமில்லை என்ற நிலையை ஏற்றுக்கொண்டோம். ஆனால் அது முஷாரப் பதவியில் இருந்து வெளியேறிவிட்டார் என்பதால் நடக்காமல் போனது. என்று கூறியிருக்கிறார்.

மேலும் அவர் கூறுகையில் காஷ்மீரில் சுதந்திரமான நிலையும் கட்டுப்பாடுகளற்ற வர்த்தகமும் செயறபடுத்த ஒத்துக்கொள்ளப்பட்டது. நிலையான, பலமான, அமைதியான ஜனநாயக பாகிஸ்தான் அமைவதையே இந்தியா விரும்புகிறது என்றும் கூறியுள்ளார்.

பாகிஸ்தானில் உள்ள ஒரு சிறு பகுதியைக் கூட இந்தியா விரும்பவில்லை என்றும் கூறியிருக்கிறார். படைகள் முழுமையாக அப்புறப்படுத்துதல், எல்லைக்குட்படாத பகுதிகளை இணைத்து இருவரும் இணைந்து கவனிக்க முஷாரப் வலியுறுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திப்பு சுல்தான் வேடத்தில் கமல்



(சென்னை)

மலையாளத்தில்,திப்புவும் உன்னியார்ச்சாயும் என்ற பெயரில் வரலாற்றுப் பட மொன்று தயாராகிறது. இதில் திப்பு சுல்தான் வேடத்தில் கமலஹாசன் நடிக்கிறார். இப்படம் மெகா பட்ஜெட்டில் தயாராகிறது. ஏற்கனவே மம்முட்டியை வைத்து பழசிராஜா என்ற வரலாற்று ஹிட் படத்தை எடுத்த கோகுலம் கோபாலன், திப்புவும் உன்னியார்ச் சாயும் படத்தைத் தயாரிக்கிறார்.

இந்த படத்தின் கதையை ஜான்பால் எழுதியுள்ளார். வயலார் மாதவன் இயக்குகிறார். படப்பிடிப்பு அடுத்த வருடம் தொடங்குகிறது. இப்படத்தில் நடிக்க கமலிடம் நான்கு மாதம் கால்ஷீட் கேட்டுள்ளனர்.

இது குறித்து ஜான்பால் கூறும்போது, கதையை எழுதும் போதே திப்பு சுல்தான் கேரக்டருக்கு கமல்தான் பொருத்தமானவர் என உணர்ந்தோம். அவர் தோற்றம் கம்பீரமாக இருக்கும். வேறு யாரும் அக் கேரகடரில் நடிக்க முடியாது. கமலுடன் நடிக்கும் இதர கேரக்டர்களுக்கு நடிகர், நடிகைகள் தேர்வு நடக்கிறது. யுத்தம்,சுதந்திரப் போராட்டம், காதல் போன்ற அம்சங்கள் படத்தில் இருக்கும் என்றார்.

# பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு சொந்தமாக நிலம் எதுவும் இல்லை

## சொத்துவிபரத்தில் தெரிவிப்பு

(புதுடில்லி)

பிரதமர் மன்மோகன் சிங்கின் சொத்து விவரத்தை பிரதமர் அலுவலகம். வெளியிட்டுள்ளது அவருடைய மொத்த சொத்து மதிப்பு 4.8 கோடி ரூபாய் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவருக்கு தெற்கு டில்லியில் வசந்த் குஞ்ச் பகுதியில் ஒரு பிளாட்டும்,சண்டிகரில் ஒரு வீடும் உள்ளன.

அவருக்குச் சொந்தமாக மாருதி 800 (1996 மாடல்) கார் ஒன்று உள்ளது.

அவருக்குச் சொந்தமாக நிலம் எதுவும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

150கிராம் அளவுக்கு தங்க நகைகள் உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோல் மற்ற அமைச்சர்களின் சொத்து விவுரங்களும் வெளியிடப்பட்டுள்ளன. அதில், இராணுவ அமைச்சர் ஏ.கே.அந்தோணிக்கு மிகவும் குறைவான சொத்துகள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முறைகேடான சொத்துச்சேர்ப்பு சபாநாயகரின் செயலர் பதவிநீக்கம்

(புதுடில்லி)

வருமானத்துக்கு அதிகமாக, முறைகேடான வழிகளில் சொத்து சேர்த்ததாக குற்றம் சாட்டப்பட்ட, லோக்சபா சபாநாயகர் மீரா குமாரின் செயலர் ஏ.பி.பதக்கின் வீடுகளில், சி.பி.ஐ., பொலிஸார் நேற்று முன்தினம் அதிரடிச் சோதனை நடத்தினர். இதையடுத்து, பதக், செயலர் பதவியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டார். லோக்சபா சபாநாயகர் மீரா குமாரின் செயலராக பணியாற்றியவர் ஏ.பி.பதக். இவர் இதற்கு முன், இந்திய நெடுஞ்சாலைத் துறை அதிகாரியாக பணி செய்து வந்தார். மூன்று மாதங்களுக்கு முன்னர் தான் அவர் லோக்சபா சபாநாயகருக்கு செயலராக நியமிக்கப்பட்டார்.

நெடுஞ்சாலைத் துறையில் பதக் பணியாற்றிய காலத்தில், வருமானத்திற்கு அதிகமாக முறைகேடான வழிகளில் சொத்து சேர்த்ததாக குற்றச்சாட்டு கூறப்பட்டது. இது குறித்து விசாரணை நடத்தும்படி சி.பி.ஐ., க்கு, மத்திய ஊழல் ஒழிப்பு மற்றும் கண்காணிப்பு ஆணையம் உத்தரவிட்டிருந்தது.இதையடுத்து, பதக் மீது வழக்கு பதிவு செய்த சி.பி.ஐ., அதிகாரிகள், டில்லி மற்றும் லக்னோவில் உள்ள பதக்கின் வீடுகளில் அதிரடிச் சோதனை மேற்கொண்டனர்.

இச்சோதனை நடந்த செய்தி வெளியானதைத் தொடர்ந்து, பதக் சபாநாயகர் செயலர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். இது தொடர்பான அறிக்கையை, சபாநாயகரின் செய்தித் தொடர்பாளர் வெளியிட்டார்.

# பிரிந்த கணவனை வஞ்சம் தீர்க்கவே ஜெயலலிதாவுக்கு வெடிகுண்டு மிரட்டல்

## கைதான ஆசிரியை வாக்குமூலம்

(சென்னை)

ஜெயலலிதாவுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்த சென்னையைச் சேர்ந்த ஆசிரியை கைது செய்யப்பட்டுள்ளார்.

இது குறித்து திருவல்லிக்கேணி பொலிஸ் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். மிரட்டல் விடுத்த பெண் பேசிய தொலைபேசி எண்ணை வைத்து பொலிஸார் விசாரணை நடததினர்.

அப்போது குறிப்பிட்ட தொலைபேசி எண்ணின் கோபுரம சென்னை தாம்பரத்தை அடுத்த மறைமலைநகர் பகுதியை காட்டியது. அங்கு சென்று பொலிஸார் விசாரித்தனர். செந்தமிழ் செல்வி (வயது 32) என்ற பெண் வெடிகுண்டு மிரட்டல் விடுத்தது தெரிய வந்தது.

ஆசிரியர் பயிற்சி முடித்துள்ள இவர் கணவரைப் பிரிந்து வாழ்ந்து வருவதாக கூறப்படுகிறது. கணவரின் பெயரில் வாங்கப்பட்ட சிமமில் இருந்து பேசி, அவரை சிக்கவைக்கத் திட்டமிட்டதாக செந்தமிழ் செல்வி வாக்குமூலம் அளித்துள்ளார்.


இது தொடர்பாக பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறும் போது, குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக செந்தமிழ்செல்வி மன உளைச்சலுடன் இருந்துள்ளார். இதன் காரணமாகவே அவர் 108-க்கு போன் செய்து பலமுறை மிரட்டல் விடுத்துள்ளார். தொடர்ந்து விசாரித்து வருகிறோம என்றார்.



இந்தியாவின் குஜராத்தில் திருமணத்திற்காக பெண்களை கவர ஆண்களின் அலகரித்த வண்டிச் சவாரி

# கூடங்குளம் அணுஉலையை எதிர்த்து உண்ணாவிரத போராட்டம் நடத்தமுடிவு

## ஹசாரேக்கும் அழைப்பு



(புதுடில்லி)

நெல்லை மாவட்டம், கூடங்குளத்தில் உள்ள அணு உலையை மூடக் கோரி, இம்மாதம் 11 ஆம் திகதி இடிந்த கரையில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறவுள்ளது. கூடங்குளம் அணு உலை எதிர்ப்பு இயக்க நிர்வாகி உதய குமார், அகில இந்திய மீனவர்கள் சங்க தேசியத் தலைவர் அண்டன் கோமஸ் மற்றும் நிர்வாகிகள் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில்,

கூடங்குளத்தில் ஆரம்பிக்க உள்ள அணு உலை,பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடும். கோவையில் கல்லூரி ஒன்றில் நடந்த பட்டமளிப்பு விழாவில் பங்கேற்ற, இந்திய அணுமின் கழகத் தலைவர் ஸ்ரீகுமார் பானர்ஜி, "அணு உலை, செபரெம்பர் 28 முதல் செயல்படும்" என கூறியிருந்தார். இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், இடிந்த கரையில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தவும்,அன்னா ஹசாரே,சமூக ஆர்வலர்கள் அருந்ததி ராய்,மேதா பட்கர் போன்றோரை அழைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. எனத் தெரிவித்தனர்.

### தடுமாறும் கூட்டமைப்பு உறுப்பினர்களின்.....

(14ம் பக்கத் தொடர்ச்சி...)

எதிர்காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்றொரு சக்தியே இருக்கக் கூடாது என்பதில் இவர்கள் மூவரும் உறுதியாக இருக்கின்ற விடயத்தினை புலம் பெயர் மக்களுக்கு சொல்லிக் கொள்ள விரும்புகின்றோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை இல்லாமல் செய்து தமிழரசுக்கட்சி என்கின்ற கட்சியினை மட்டுமே பிரதான கட்சியாகக் கொள்ள வேண்டும் என்று இவர்கள் செயற்பட்டுவருகின்றமைகாக்க பல ஆதாரங்கள் எம்மிடம் இருக்கின்றன.

அறிவார்ந்த ரீதியில் செயற்படுவதன் மூலம் தான் எமது விடுதலையை வென்றெடுக்க முடியும், ஆயுதக் கலாசாராத்தை முற்றாக நிராகரிக்கிறோம். என்று தெரிவித்து வருகின்ற நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் புலம் பெயர் மக்கள் மத்தியில்,தான் தமிழரசுக்கட்சியல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தான் என்பதை பகிரங்கமாக தெரிவிப்பாரா? தேர்தலில் போட்டியிட்ட காலப் பகுதியில் மாவீரர்களின் கல்லறைகளை இராணுவம் கிளறுகின்றது, மாவீரர்களுக்கு விளக்கேற்ற முடியவில்லை என்று மேடைகளில் கண்ணீர்விட்டபோது யாருக்குத்தான் புல்லரிக்கவில்லை? அவரால் இப்போது மீண்டும் வேட்டியை மடித்துக் கட்டவைக்காதீர்கள் என்பதை மட்டும் தான் சொல்ல முடிகிறதா? தேர்தலின் பின்னர் இரண்டாவது மாவீரர் நாளும் வருகிறது எங்கே போனது அவரது ஆவேசம்? தேர்தலுடன் மாவீரர்களின் ஆத்மாக்கள் சாந்தி அடைந்து கொண்டனவா? ஆயுதக் கலாசாரத்தினை நிராகரிக்கிறோம், தமிழரசுக்கட்சியின் பின்னால் தான் நிற்பேன் என்று அடம் பிடிக்கும் அவரை புலத்தில் உள்ள மக்கள் தான் கூட்டமைப்பு என்கின்ற வழியினை நோக்கி உந்த முடியும் என நாம் நம்புகின்றோம்.

லண்டனில் நடைபெறவுள்ள நிகழ்வு தேசிய நலன் சார்ந்தாக இருந்தால் ஏனைய மாவட்டங்களில் இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் எங்கே? அவர்களுக்கும் பிரித்தானியா வாழ் தமிழ் மக்களுக்கும் என்ன குழப்பம்? அல்லது அவர்களுக்கு தேசியம் தொடர்பில் சிந்திக்கும் ஆற்றல் அற்றுப் போய் விட்டதா? தகுதி நிலை இல்லையா? இந்தக் கேள்விகளுக்கான பதில் என்ன?

பிரகடனங்கள், கலந்துரையாடல்கள் என்ற மாயையைக் காட்டி எமது மக்களின் வியர்வை தந்த பணத்தினைப் பெற்று புகைப்படக் கருவிகளுக்கு முன்பாக வழங்கி விளம்பரம் செய்யவே காத்திருக்கிறார்கள் என்பதை புலத்தில் உள்ள எமது மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். எனவே புரிதல் எமது தமிழ் மக்களின் இரத்தத்தில் நன்கு ஊறியது. ஒவ்வொருவர் தொடர்பிலும் ஒவ்வொரு நகர்வுகள் தொடர்பிலும் புரிந்து கொள்ளும் எம் மக்களுக்கு இந்த விடயங்கள் எல்லாம் புரியாமல் விடவா போகிறது? புலத்தில் மக்கள் உழைத்து வழங்கும் பணம் எப்போது தாயக மக்களுக்கு சமமாக பங்கிடப் படுகிறதோ? அன்று அள்ளி வழங்குங்கள். உங்கள் உழைப்பு வீண் போகக் கூடாது.

நன்றி - சரிதம்

# லிபியாவின் இடைக்கால அபிவிருத்திக்கு உலக நாடுகளின் 1500 கோடி டொலர்

(பாரிஸ்)

முடக்கப்பட்டிருந்த லிபியாவுக்கான 1500 கோடி அமெரிக்க டொலர் நிதியினை 63 உலக நாடுகள் விடுவித்துள்ளன.

சட்டத்தையும் ஒழுங்கையும் பேணும் சிறந்த மக்களாக லிபிய சமூகத்தை முன்னெடுத்துச் செல்வோம் என லிபியாவின் இடைக்கால நிர்வாகம் உலகத் தலைவர்களுக்கு உறுதியளித்துள்ளது.

பாரிசில் இடம்பெற்று வரும் லிபிய தொடர்பான மாநாட்டில் உரையாற்றிய இடைக்கால நிர்வாகக் குழுவின் தலைவர் முஸ்தபா அப்டெல் ஜலில் இந்த உறுதி மொழியினை வழங்கியுள் ளார்.

லிபியாவிற்கான புதிய அரசியல் யாப்பு ஸ்தாபிக்கப்பட்டு 18 மாத காலப் பகுதியினுள் பொதுத்தேர்தல் நடத்தப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த மாநாட்டிற்கு தலைமை தாங்கிய பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கொலஸ் சர்க்கோசி கருத்துத் தெரிவிக்கையில், சகிப்புத் தன்மை மற்றும் மன்னிக்கும் மனப்பான்மை என்பனவற்றை லிபியா வளர்த்துக் கொள்ள வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

முன்னாள் லிபியத் தலைவர் கேணல் கடாபி லிபியாவிற்கு அச்சுறுத்தலாக இருக்கும் வரை விமானக் குண்டு வீச்சுக்கள் தொடரும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் கலந்து கொண்ட சகல 63 நாடுகளும், தம்மால் முடக்கப்பட்ட நிதி அனைத்தும் லிபிய மக்களிடம் மீளக் கையளிக்கப்படும் என உறுதியளித்துள்ளதாக பிரான்ஸ் ஜனாதிபதி சுட்டிக் காட்டியுள்ளார்.


இரகசியமாக இடம்பெற்று வரும் இந்த மாநாட்டின் போது ஆயிரத்து 500 கோடி அமெரிக்க டொலரகளை எந்த வகையில் செலவிடுவது என்பது குறித்து லிபியாவின் இடைக்கால நிர்வாகம் முடிவெடுக்கும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கச்சா எண்ணெய் இறக்குமதி ஐரோப்பிய யூனியன் தடை

சிரியாவில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு கச்சா எண்ணெய் இறக்குமதி செய்ய ஐரோப்பிய யூனியன் தடை விதித்துள்ளது. இதன் மூலம் சிரியா ஜனாதிபதி பஷர் அல் அசாத்துக்கு மேலும் நெருக்கடி அதிகரித்துள்ளது.


சிரியா தலைநகர் டமாஸ்கஸ், துருக்கி எல்லை அருகிலுள்ள நகரங்கள் என நாடு முழுவதும் ஜனாதிபதிக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்தவண்ணமுள்ளன. மக்கள் மீது பாதுகாப்புப் படைகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் டமாஸ்கஸ் புறநகர்ப் பகுதியில் நான்கு பேரும், டைர் அல் ஜோர் நகரில் மூன்று பேரும் பலியாயினர்.

இந்நிலையில் போலந்து நாட்டின் சாபாட் நகரில் கூடிய ஐரோப்பிய யூனியன் கூட்டத்தில் சிரியாவில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு கச்சா எண்ணெய் இறக்குமதி செய்வதற்குத் தடை விதிக்க முடிவு செய்யப்பட்டது. பிரான்ஸ் தலைநகர் பாரிசில் நடந்த 'லிபியாவின் நண்பர்கள்' கூட்டத்தில் பேசிய பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் சிரியா மீது மேலும் பல பொருளாதாரத் தடைகள் விதிக்கும்படி வலியுறுத்தினார்.



லிபிய விவகாரம் குறித்த மாநாடு பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடைபெற்றது. இதில் பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கோலஸ் சர்கோஸி (வலது), லிபியாவின் அரசியல் விவகாரங்களுக்கான தூதுவர்களுடன் கலந்துரையாடுவதைக் காணலாம்.

# செப்ரெம்பர் 11 தாக்குதலில் மீட்ட தொலைபேசிகளின் கண்காட்சி



(நியூயோர்க்)

செப்ரெம்பர் 11 தாக்குதலின் 10 ஆவது நினைவுதினம் வரும் 11ஆம் திகதி கடைப்பிடிக்கப்படுகிறது. இதில் பலியானோரின் நினைவாக தொலைபேசிகள் கண்காட்சிக்கு வைக்கப்படவுள்ளன.

இந்தத் தாக்குதலில் உயிரிழந்தோரின் கருகிப்போன தொலைபேசிகள் சேகரிக்கப்பட்டுள்ளன. அந்தத் தொலைபேசிகள் 10ஆவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி கண்காட்சியில் வைக்கப்படுகிறது.

60 தொலைபேசிகள் தாக்குதல இடத்தில் இருந்து எடுக்கப்பட்டு அமெரிக்காவின் எப்.பி.ஐ வசம் உள்ளது. அவை தற்போது கண்காட்சியில் வைக்கப்படுகின்றன.

# அமெரிக்காவில் மீண்டும் சூறாவளி வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை

(வொஷிங்டன்)

அமெரிக்காவில் மீண்டும் சூறாவளி புயல் தாக்கும அபாயம் ஏற்பட்டுள்ளதாக வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அட்லாண்டிக் கடலில் உருவாகியுள்ள காற்றழுத்தத் தாழ்வு பெரும் புயலாக உருமாறி அமெரிக்காவின் தென்கிழக்கு கடலோரப் பகுதியை நோக்கி நகர்ந்து வருவதாக அந்நாட்டு வானிலை அறிவிப்பு மையம் அறிவித்துள்ளது. இந்த எச்சரிக்கையை அடுத்து அமெரிக்காவின் லூசியானா மாநிலத்தில் நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அம்மாநில ஆளுநர் பாபி ஜிண்டால் செய்தியாளர்களிடம் கூறுகையில், மாநிலத்தில் தொடர்ச்சியான கன மழை பெய்து வருவதால் கடலோரப் பகுதிகளிலும், உள் பகுதிகளிலும் வெள்ளம் ஏற்பட வாய்ப்புள்ளது.

சில பகுதிகளில் 30 இல் இருந்து 38 செ.மீ அளவுக்கு மழை பெய்ய வாய்ப்புள்ளது. அபாயத்தை எதிர்நோக்கி தயாராக இருப்பது கடந்த காலத்திலிருந்து பெற்ற அனுபவமாகும். மக்கள் தங்களையும், தங்கள் குடும்பத்தையும் பாதுகாத்துக் கொள்ள இதுவே சரியான தருணம் என்று அவர் தெரிவித்தார். மெக்ஸிகோ வளைகுடாபகுதிக் கடலிலிருந்து எண்ணெய் நிறுவனங்கள் தங்கள் ஊழியர்களை வெளியேற்றியுள்ளனர்.

மிசுஸிப்பி நதியின் முகத்துவாரத்திலிருந்து 360 கிலோ மீற்றர் தெற்கில் மையம் கொண்டுள்ள அந்தக் காற்றழுத்தத் தாழ்வு மணிக்கு 55 கிலோ மீற்றர் வேகத்தில் வடக்கு நோக்கி நகர்ந்து வருகிறது. ஐரின் புயலால் வெள்ளக்காடான அமெரிக்காவின் வடகிழக்குப் பகுதி இயல்பு நிலைக்கு மீண்டு வரும் நிலையில் மீண்டும் ஒரு புயல் எச்சரிக்கையை வானிலை மையம் அறிவித்துள்ளது. 2005ஆம் ஆண்டு கத்ரீனா புயலால் அமெரிக்காவின் தெற்குப்பகுதி மாநிலங்கள மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

# பதிவிறக்கப் பெட்டகம்

கொலையாளிகள் பற்றி எனக்குப் பயமில்லை. அவர்கள் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டவர்கள். மற்றவர்கள்தான் எந்த நேரமும் ஒரு கொலையாளியாவதற்கு தயாராக இருக்கிறார்கள். அதுதான் என்னை பயமுறுத்துகிறது.

- ஜோர்ஜ் லூயி போர்ஷே

அறத் தகுதியும் அறக் குவிப்பும் மிகையான வசதியின் அதிகாரம். இந்த மிகையான வசதியின் அதிகாரம் பிறரிடம் கேட்பதெல்லாம் கீழ்ப்படிதலையே.

- நீட்சே

எழுதும் விரல்களும் சீருடைகள் அணிந்துள்ளன.

- சங்கா

நம்மேல் அதிகாரத்தை செலுத்தும் அரசு, அவற்றின் உப அலகுகளாய் திகழும் நிறுவனங்கள் இவற்றுக்கு ஈடான அதிகாரப் பிராந்தியத்தின் அங்கீகரிக்கப்பட்ட குற்றவியல் பரப்புக்குள் தானும் நுழையும் ரகசியக் கனவை நம் தமிழ் எழுத்தாளர்கள் செயல்படுத்தத் தயாராகிவிட்டார்கள். என் ஒன்பது வரியை வெளியிடுவீர்களா என்று பணிவான பாவனையில் கேட்பதும், 'எனக்கும் அதிகாரத்தில் இடம் கொடுத்து விடுங்களேன்' என்று கேட்பதும் ஒன்றானதே. இவர்கள் சக எழுத்தாளர்களுக்கான கருத்துவெளி குறித்து கவலைப்படுவது தங்கள் அங்கீகாரத்தின் மீதான முனைப்பே தவிர வேறொன்றுமில்லை.

- சங்கரராமசுப்ரமணியன்

நம்மிடமிருந்து நமக்குக் கிடைக்கும் ஆனந்தத்திற்கு அடுத்தபடியாக நமக்கு அதிக ஆனந்தம் தரும் விஷயம் அடுத்தவர்களுக்கு, அவர்களிடமிருந்து அவர்களுக்குக் கிடைக்கும் சந்தோஷத்தைக் கிடைக்க விடாமல் செய்வது பொதுவாக இது, அதிகாரத்தைக் கைப்பற்றுவதன் வழி நடந்தேறுவது. இதன் காரணமாகவே தூய்மைவாதிகளின் ஆட்சியதிகாரத்தின் கீழ் இருப்பவர்கள் அதிகாரம் தொடர்பான அளப்பரிய ஆர்வம் கொண்டவர்களாய் மாறுகிறார்கள். அதிகாரத்தின் மீதான அளப்பரிய ஆசை என்பது தூய்மைவாதிகள் எதிர்த்துவரும் மதுவருந்தும் வேட்கை மற்றும் அத்தகைய பிற வேறு தீங்குகளை விட பன்மடங்கு தீமை பயப்பது. ஒழுக்கமான மனிதர்களிடம் அதிகாரத்திற்கான ஆசை என்பது மற்றவர்களுக்கு நல்லது செய்யும் ஆசை என்பதான போர்வைக்குள் தன்னை ஒளித்துக் கொண்டு இருக்கிறது என்றாலும் அதன் சமூகரீதியான பாதிப்புகளைப் பொறுத்தவரை எந்த மாற்றமுமில்லை.

- பேர்ட்ரண்ட் ரஸ்ஸல

எல்லோரும் ஏன் நேர்மையை, நற்குணங்களுடன் சம்பந்தப்படுத்துகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. 'நற்குணங்களாக' இச்சமூகமும், சட்டங்களும், கலாசாரமும் வரையறுத்திருப்பவற்றிற்கும் 'நேர்மை'க்கும் தொடர்பில்லை. எல்லோருக்கும், எல்லாக் காலங்களுக்கும் பொதுவான நல்லது ஒன்றிருக்க முடியாது. ஒன்று உங்களுக்கு நல்லதாகப் படுவது எனக்குக் கெட்டதாகப் படலாம். ஒரு சமூகத்தில் நல்லது என்று கருதப்படுவது மற்றொரு சமூகத்தில் கெட்டதாகக் கருதப்படுகிறது. முஸல்மான்களாகிய நம்மிடையே அக்குளில் முடி வளர்ப்பது பாவம் எனக் கருதப்படுகிறது. ஆனால் சீக்கியர்களுக்கு அப்படியில்லை. கடவுள் என்று ஒன்று இருந்தால் நான் அதனிடம் இதைத்தான் வேண்டிக் கொள்வேன்: மனிதன் உருவாக்கிய சட்டங்களை உடைத்தெறி. மனிதன் உருவாக்கிய இந்தச் சிறைச்சாலைகளைத் தரைமட்டமாக்கு.

- சதாத் ஷசன் மாண்டோ சிறுகதையில்

உழைப்பு என்பது வருத்தக் கூடியதாகவும் சலிப்பூட்டக் கூடியதாகவும் இல்லாமல் உழைப்பு என்பது உற்சாகமூட்டக் கூடியதாகவும் விளையாட்டைப் போன்று மகிழ்ச்சியான செயற்பாடாகவும் இருக்க வேண்டும் என்றே நான் விரும்புகிறேன். உழைப்பு என்பது ஒரு கலைச் செயற்பாட்டைப் போல ஆக்கபூர்வமானதாகவும் இன்பமாகவும் ஒருசேர அமைய வேண்டும். இல்லாதபட்சத்தில் நான் சோம்பேறியாக இருக்கவே ஆசைப்படுகிறேன்.

- போல் லஃபார்க்

நசுக்கப்படும் உணர்ச்சிகளின் காலகட்டத்தில் நாம் கட்டுக்கதைகளையும் புதிய வேடிக்கைகளையும் உருவாக்க வேண்டிய நிலையில் உள்ளோம். எல்லாக் குரல்களும் தாங்கள் உண்மையே பேசுகிறோம் என்று தீவிரம் மிகுந்த முகங்களுடன் பேசும்போது நாம் பொய்க்கதைகளைப் பரப்புவோம்.

- இடாலோ கால்வினோ


நாம் இப்போது இலட்சியங்கள் நாசமடைந்துபோன உலகில் வாழ்கிறோம். யாராவது ஒருவர் சற்றே தூய்மையானவராக இருப்பதைப் பார்த்தால் போதும், அவரை உடனே கறைப்படுத்தி நாசமாக்குகிறவரைக்கும் நமக்குத் தூக்கம் வருவதில்லை. யாரும் தூய்மையானவர்களாக இருக்க வாய்ப்பில்லை என்பதைப் பார்க்க விரும்புகிற காலத்தில் நாம் வாழ்கிறோம். ஒவ்வொரு வேலைக்குப் பின்னாலும் தன்னலமே இருக்கிறது என்பதைப் பார்க்க ஏன் விரும்புகிறோம் தெரியுமா? அப்போதுதான் சந்தைமயமான உலகில் எந்தவிதமான குற்றஉணர்ச்சியும் இல்லாமல் நம்மால் நிம்மதியாக வாழமுடியும் என்பதற்காகத்தான்.

- விவேக் ஷான்பாக்

# தடுமாறும் கூட்டமைப்பு உறுப்பினர்களின் ஐரோப்பிய பயணமும் புலம்பெயர் தமிழர்களின் வரலாற்று கடமைகளும்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்குகொள்ளும் பல்வேறு நிகழ்வுகள் புலம்பெயர் நாடுகளில் குறிப்பாக பிரித்தானியாவினை மையப்படுத்தி நடைபெறுதவதற்கான விளம்பரங்கள், செய்திகள் ஊடகங்களில் வெளிவந்தவண்ணம் உள்ளன. இந்த நிகழ்வுகளின் ஊடாக ஈழத்தில் வாழும் எம் உறவுகளின் வாழ்வாதார மாற்றத்திற்கு உதவவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்குகொளளும் நிகழ்வுகளின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துவருகின்றனர்.

பிரித்தானியாவிற்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பயணம் மேற்





கொண்டு நிதி சேகரிப்பதனை மேலெழுந்தவாரியாக நோக்கும் போது அவர்களின் தேசியம் தொடர்பிலான அதீத செயற்பாட்டின் வெளிப்பாடாகவே அதனைப் பார்க்கமுடியும். உண்மையில் இவற்றின் பின்னணிகள், இவர்கள் சேர்க்கும் நிதிகள் சரியான முறையில் பகிர்ந்தளிக்கப்படுகின்றனவா.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பெயரளவில் கூட்டமைப்பாக வெளித்தெரிகின்ற போதிலும் அதற்குள் பெருமளவான பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன. கூட்டமைப்பில் ஐந்து பிரிவுகள் காணப்படுவதை அவதானிகக லாம். நான்கு கட்சிகளைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் கட்சிகள் இல்லாமல் பொதுவாக வந்து நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவானவர்களும் இருக்கின்றனர்.

இவர்கள் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட ரீதியில் வெவ்வேறான கொளகை நிலைப்பாடுகள் காணப்படுகின்றன. கட்சிகள் சாராது அரசியலுக்கு வந்தவர்களுக்கு விடுதலைப்புலிகள் இல்லாத தற்போதைய நிலையில் ஒரு உறுதியான நிலைப்பாட்டினை எடுக்க முடியாத இக்கட்டான நிலை காணப்படுகின்றது.

காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினைப் பதிவு செய்யுமாறு வற்புறுத்தினால் கட்சியையும் உறுப்பினர்களையும் தீர்மானிக்கின்ற சக்திகள் காலபபோக்கில் தங்களை கழற்றிவிடலாம் என்ற பயம் காணப்படுகின்றது. இதன் காரணமாகவே கட்சிகள் சாராது நேரடியாகவே கூட்டமைப்பிற்குள் வந்தவர்கள் (விடுதலைப்புலிகளின் ஆதரவுடன் வந்தவர்கள்) மென்போக்கைக் கடைப்பிடிக்கின்றனர்.

விடுதலைப்புலிகளுக்குப் பின்னான காலத்தில் புதிதாக அரசியலுக்கு வந்தவர்கள் தாம் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவானவர்கள் என்று தேர்தல் காலத்திலும், புலம்பெயர் நாடுகளுக்கு பயணம் மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களிலும் தெரிவிக்கின்ற போதிலும்' ஆயுத கலாசாராத்திற்கு எதிரானவர்கள் என்ற தோற்றப்பாட்டினைக் காட்டிக்கொள்ள முற்படுகின்றனர்.

ஆயுத கலாசாரத்திற்கு எதிரானவரகள் என்று காட்டிக்கொள்வதன் மூலமே எதிர்காலத்திலும் தமக்கான கதிரைகளை தக்கவைத்துக் கொள்ளலாம் (தமது மேலிடத்திடம்) எனக் கருதிக் கொள்கின்றனர்.

இவற்றினைவிடவும் ஆயுதக் கலாசாரத்தில் இருந்து வந்த கட்சிகளைச் சார்ந்தவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை பதிவு செய்வதன் மூலமே தமிழர் பலத்தினை சிதையவிடாமல் பார்த்துக்கொள்ள முடியும். எனவே கட்சியினைப் பதிவு செய்யவேண்டும் என்று தெரிவித்து வருகின்ற போதிலும அதற்கான அங்கீகாரத்தினை ஏனைய உறுப்பினர்கள் வழங்குவார்களா?

அல்லது ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் கஜேந்திரகுமார், கஜேந்திரன் ஆகியோருக்கு ஏற்பட்ட நிலை போல தமக்கும் நிலை ஏற்படுமா? என்ற சந்தேகத்தினால் ஒதுங்கிப் போதல் அல்லது நழுவிக்கொள்ளுதல் கொள்கையினை கடைப்பிடிப்பதால் கூட்டமைப்பு பதிவு செய்வதற்கான வீரியம் அற்றுப் போகின்றது.

நாளுக்கு நாள் முரண்பாடுகள் அதிகரிக்கின்ற போது கூட்டமைப்பில் இருந்து வெளியேறவோ, கூட்டமைப்பில் இருந்து வெளியேற்றவோ முற்படுகின்ற நிலைப்பாடுகூட ஏற்படலாம். இதற்கு உதாரணமாக கஜேந்திர குமார் தலைமையிலான இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் வெளியேறிய

மையை, கஜேந்திரன், பத்மினி வெளியேற்றப்பட்டமையைக் குறிப்பிடலாம்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினை ஒரு கட்சியாகப் பதிவு செய்தவன் மூலம் ஒரே தலைவர், ஒரே கட்சி என்ற நிலைப்பாட்டில் இருந்து எவரும் விலகிவிட முடியாது. கட்சிக்குரிய யாப்பு, அதன் கொள்கைளுக்கு ஏற்ப அனைவரும் செயற்பட வேண்டிய கடடாய நிலை ஏற்படும். தற்போது கூட முடிவுகள் எடுக்கும் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்ற போது தமிழரசுக்கட்சியின மத்தியகுழு கூடியே முடிவெடுக்கின்றது.

இந்தச் சந்தர்ப்பங்களில் ஏனைய கட்சிகளைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களோ, கட்சிகளைச் சாராது நாடாளுமன்ற உறுப்புரிமை பெற்றவரகளோ மூக்கில் விரல் வைத்து பார்த்துகொண்டிருக்கும் நிலைப்பாடு தான் ஏற்படும்.

அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கு பலவேறு பகுதிகளால் நிதிகள் வழங்கப்பட்டபோதிலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரது கைகளிலிருந்தே அந்த நிதிகள் பகிர்ந்தளிக்கபபட்டிருக்கின்றன.

குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கட்சிக்கு ஆதரவு வழங்கக் கூடியவர்களுக்கு கூடுதலான நிதியினையும் கூட்டமைப்பு என்ற நிலைப்பாட்டில் இருப்பவர்களுக்கு ஐந்தாயிரம் ரூபாய் மட்டும் வழங்கியிருக்கின்றனர். அந்த நிதுகள் எவ்வாறு கிடைக்கப் பெற்றன. அவற்றின் வரவு செலவு எதுவுமே வேறு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தெரியவே தெரியாது.

இவ்வாறான நிலையில் புலத்தில் சேர்க்கப்படும் நிதி அனைத்து மாவட்டங்களுக்கும் கிடைக்கும், அனைத்து மக்களையும் சென்றடையும் என நீங்கள கருத முடியுமா? கட்சிக்குள் இருக்கும் பிணக்குகளை நீக்கிக்கொள்ள கூட்டமைப்பினை ஒரு கட்சியாகப் பதிவு செய்ய வேண்டும். அதுவரையில் உங்கள் வியர்வையில், இரத்தத்தில் சேகரித்த பணத்தினை தனி மனித நலன்களுக்காக பயன்படுத்தும் வகையில் நீங்கள் வழங்குவது உங்கள் இனத்திற்கு நீங்கள் செய்கின்ற கெடுதலாகவே அமைந்துவிடும் என்பதை மறந்து விடாதீர்கள்.

இதுவரை காலமும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிடம் சரியான கணக்கறிக்கை இல்லை என்பதை தேர்தல்கள் ஆணையாளர் மூலமே கூட்டமைப்பினர் வெளிப்படுத்தியிருக்கின்றனர். காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்வதற்கான ஒரு விண்ணப்பத்தினை தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தயாரித்திருந்தார். (அதற்கான ஒப்புதல் கடிதத்தினை தமிழரசுக்கட்சி இன்றுவரை வழங்கவில்லை. என்பதால் பதிவு செய்ய முடியாத நிலை உள்ளது.) அதறகமைய தேர்தல்கள் திணைக்களம் கூட்டமைப்பினைப் பதிவு செய்ய முடியாமைக்காக இரண்டு விடயங்கள் தொடர்பில் கூட்டமைப்பிடம் ஆவணங்களைக் கோரியிருந்தது. ஒன்று கூட்டமைப்பின் கடந்தகாலக் கணக்கறிக்கை. இரண்டாவது கூட்டமைப்பில் அங்கம் பெறும் கட்சிகளின் ஒப்புதல் கடிதங்கள். கட்சியின் கணக்கறிக்கை கேட்கப்படட போது கூட்டமைப்பினரிடம் எந்தவிதமான கணக்கறிக்கைகளும் இல்லாத நிலையில், தனியான ஒரு கணக்காளரைத் தேடி அவரூடாகவே ஒரு(!) கணக்கறிக்கை தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டிருக்கின்றது.

ஆக இதுவரை காலமும் எந்தக் கணக்கறிக்கையையும் வைத்திருக்காத நாடாளுமன்ற உறுப்பினர்கள் இனி வருங் காலங்களில் நீங்கள் வழங்குகின்ற நிதிகளை எவ்வாறு பயன்படுத்துவார்கள் என்ற சந்தேகம் உங்களுக்கு எழவில்லையா? நிதி வழங்க வேண்டுமா? இல்லையா என்பதை சிந்திக்கவேண்டிய நிலையில் நீங்கள் இருக்கின்றீர்கள்.

தொண்டு நிறுவனம் ஒன்றினை கூட்டமைப்பு இதுவரை பதிவு செய்யவில்லை! தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகளை எட்டியிருக்கின்ற நிலையிலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினால் ஒரு பொதுவான தொண்டு நிறுவனத்தினை ஏனும் பதிவு செய்ய முடியவில்லை. இந்த விடயத்தினை ஏற்கனவே எமது ஆசியர் பீடம் சுட்டிக்காட்டியிருந்த போதிலும் மீண்டும் அதனை வெளிப்படுத்த வேண்டிய நிலை தற்போது எழுந்துள்ளது.

இலங்கையின் சட்டதிட்டங்களின் நுணுக்கங்களை நன்கு ஆராய்ந்து அறிந்தவர் என்று சொல்லப்படுகின்ற திரு சுமந்திரன் அவர்கள் தொண்டு நிறுவனம் ஒன்றினை பதிவு செய்வது தொடர்பிலான பொறுப்பினை ஏற்றுக் கொள்வார் என்று கூட்டமைப்பின் தொடக்கக் கூட்டங்களிலேயே முடிவு செய்யப்பட்டிருந்தது. ஆனாலும் இன்றைய வரையில் அந்த விடயம் பேச்சளவிலேயே இருக்கின்றது.

புலத்தில் சேர்க்கப்படுகின்ற நிதியினை பகிர்ந்தளிப்பதற்கு ஒரு பொறிமுறையாக கூட்டமைப்பினால் பதிவு செய்யப்படுகின்ற தொண்டு நிறுவனத்தினைப் பயன்படுத்த முடியும். இவ்வாறான தொண்டு நிறுவனம் செயற்படுகின்ற போது அதன் நடவடிக்கைகள் நிறுவன மயப்படுத்தப்படுகின்ற போது கட்சி சாராத வகையில் அது முன்னெடுக்கப்படும். நிறுவனமயப்படுத்தப்பட்ட ஒரு நடவடிக்கையில் நம்பிக்கை அதிகரிக்கும் என்பதால் புலத்தில் உள்ள மக்களும் புலத்தில் உள்ள அமைப்புக்களும் குறித்த நிறுவனத்துடன் இணைந்து பணியாற்ற முன்னிற்பார்கள்.

அதேபோல கிடைக்கின்ற உதவிகளை சகல மாவட்டங்களுக்கும் பகிரநதளிக்கும் நடவடிக்கையினையும் சிறப்பாக மேற்கொள்ள முடியும். தற்போது கூட புலத்தில் சேகரிக்கப்படுகின்ற நிதயினை தனிப்பட்ட அரசியல் தேவைகளுக்காகவும், குறிப்பிட்ட பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்காகவுமே வழங்குவார்களே தவிர பொதுவாக பகிர்ந்து வழங்கமாட்டார்கள் என்பதை பகிரங்கமாகச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்துவோம் அனைவரும் உதவி செய்யுங்கள் என்று பெறப்படும் நிதி கிளிநொச்சியின் ஒரு பகுதிக்கு மாத்திரமே வழங்கப்படும். வன்னியில் முல்லைத்தீவு என்றொரு மாவட்டம் உள்ளது. அங்கு நூற்றுக்கணக்கான கிராமங்கள் உள்ளன. அந்தக் கிராமங்களில் இலட்சக்கணக்கான மனித உயிர்கள் வாழ்கின்றன என்ற தகவல்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது.

கிளிநொச்சியிலும், யாழ்ப்பாணத்திலும் உதவிகள் வழங்கப்படுகின்றன. அவற்றின் புகைப்படங்களும் செய்திகளும் நாளுக்கு நாள் இணையத் தளங்களில் வெளிவருகின்றன. இவ்வாறான நிகழ்வுகள் அம்பாறையிலோ, மட்டக்களப்பிலோ, திருகோணமலையிலோ, மன்னாரிலோ, முல்லைத்தீவிலோ, வவுனியாவிலோ நடைபெற்றதாக யாராவது அறிந்திருக்கின்றீர்களா? இந்த மாவட்டங்களில் வாழ்கின்ற மக்கள் போருக்காக எதனையும் செய்யவே இல்லையா? அல்லது அவர்கள் என்ன செய்தால் எமக்கென்ன அடுத்த தேர்தலில் எமக்கு வ்ாக்களிக்க வேண்டும் என்ற எண்ணப்பாட்டுடன் நிதி சேகரிக்க புறப்பட்டிருக்கின்றனரா? நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற கேள்வியை நேரடியாகவே சரிதம் ஆசிரியர் பீடம் கேட்டு நிற்கின்றது.

தேசிய விடுதலைப் போராட்டம் வீச்சுபெற்றிருந்த காலத்தில் தமது வாழ்நாள் முழுமையிலும் கட்டிமுடிக்க முடியாத கடன்களைப் பெற்றுக்கொடுத்தவர்கள் புலம்பெயர் மக்கள். அந்த மக்கள் தேசியம் என்ற கொள்கையில் இருந்து கீழிறங்கி சில பிரதேசங்



களை மட்டும் மையப் படுத்தி அரசியல் செய்வதற்காக நிதி தருமாறு கோருபவர்களுக்கு நீங்கள் நிதி வழங்க முடியுமா?

### பிரித்தானியப் பயணத்தின் நோக்கம் வேறு!

லண்டன், வோல்த்தம்ஸ்ரோவ் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவத்தினை ஒட்டி வெளியிடப்பட்ட பாடல் இறுவட்டு வெளியீட்டு விழாவிற்காக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அழைக்கப் பட்டிருந்தார். இதே கற்பக விநாயகர் ஆலய அறங்காவல் சபை ஆதரவு டன் பொதுக்கூட்டம் ஒன்றையும் இன்று நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டு விளம்பரங்களும் மேற்கொளளப்பட்டன.

• ஈழத்தமிழர்களின் அரசியல் உரிமைககான பிரகடனத்தை உருவாக்குதல்

• ஈழத்தில் வாழும் எம் உறவுகளின் வாழ்வாதார மாற்றத்திற்கு உதவுதல்

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சிவஞானம் சிறீதரன், சரவணபவன் ஆகியோர் கலந்து பிரித்தானிய வாழ் தமிழ் மககளின கருத்துக்களோடு நிரந்தர அரசியல் தீர்வு தொடர்பாக ஆராய்தல் என்ற ரீதியில் பிரமாண்ட நிகழ்விறகான அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது.

உண்மையில் இந்த நிகழ்வு தொடர்பில் தாயகத்தில் இருக்கின்ற கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவருக்கும் தெரியாதாம் என்பது தான் முக்கிய செய்தியாகும். புலத்தில் உள்ள மக்களை ஏமாற்றி அர சியல் இலாபம் ஈட்டுவதை இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைவிட்டு பொது நோக்குடன் செயற்பட முன் வரவேண்டும்.

அரசியல் உரிமைக்கான பிரகடனம், நிரந்தர அரசியல் தீர்வு தொடர்பில் பிரித்தானிய வாழ் தமிழ் மக்களோடு ஆராய்வதற்கு இவர்கள் மூவரும் செல்வதன் பின்னணி என்ன?

(12ம் பக்கம் தொடர்ச்சி...)

# புலிகளின் போர்க்குற்றம் ஐ.நா. வளாகத்தில் படக்காட்சி

(கொழும்பு)

சனல் - 4 தொலைக்காட்சி தயாரித்து வெளியிட்ட இலங்கையின் கொலைக்களங்கள் ஆவணப் படத்துக்குப் போட்டியாக, இலங்கை அரசாங்கம் தயாரித்துள்ள ஆவணப்படம் ஐ.நா வளாகத்தில் காண்பிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை பாதுகாப்பு அமைச்சு தயாரித்துள்ள இந்த ஆவணப்படத்தை ஐ.நா. வளாகத்தில் அம்மர்ச்க் ஜொல்ட் மண்டபத்தில் எதிர்வரும் செப்ரெம்பர் 6 ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் திரையிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த நிகழ்வில் பங்கேற்குமாறு பலருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஆவணப்படம் திரையிடப்பட்ட பின்னர் ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிபிடப் பிரதிநிதி கலாநிதி பாலித கொஹன்ன, பிரதி வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவீந்திர சில்வா ஆகியோர் கேள்விகளுக்குப் பதிலளிக்கவுள்ளனர்.

முன்னதாக சனல் - 4 வெளியிட்ட இலங்கையின் கொலைக் களங்கள் ஆவணப்படம் ஐ.நா. வளாகத்தில் உள்ள தேவாலய நிலையத்தில் திரையிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பருத்தித்துறையில் மர்மமனிதன் பீதி


(அச்சுவேலி)

பருத்தித்துறை ஆத்தியடி, அவ்வொல்லைப் பகுதிகளில் பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் பதுங்கியிருந்த மர்ம மனிதர்கள் சிலரை அவ்வூர் பொது மக்கள் மடக்கிப் பிடிப்பதற்காகத் துரத்திச் சென்றபோது அவர்கள் தப்பியோடி விட்டதாக அவ்வூர் மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த முதலாம் திகதி இரவு நள்ளிரவை அண்டிய வேளையில் அவ்வொல்லைப் பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் வீட்டு வளவொன்றுக்குள் புகுவதற்கு முற்பட்டவேளை வீட்டார் கூக்குரலிட்டுக்கொள்ள அயலவர்கள் மற்றும் அவ்வூர் இளைஞர்கள் அவ்விடத்திற்கு ஓடிவந்து மேற்படி நபர்களை துரத்திச் சென்ற வேளை அவர்கள் அங்குள்ள சிறு ஒழுங்கைகளுக்கூடாக தப்பியோடி விட்டதாக தெரிவித்துள்ளனர்.

இதனால் பரபரப்படைந்த பொதுமக்கள் இரவிரவாக கிராமம் பூராகவும் சுற்றித்திரிந்து கண்காணிப்பு செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

# சட்டத்துக்கு எதிராக செயற்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்



(கிளிநொச்சி)

சட்டத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவோரைக் கட்டுப்படுத்துவதற்கு மாத்திரமே பொலிஸார் ஆயுதங்களைப் பயன்படுத்துவதாக கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சாலிய சில்வா தெரிவித்தார்.

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 145 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் நேற்று நடைபெற்ற விசேட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பொதுமக்களில் சிலர் கஷ்டதுன்பங்களை கருத்திற்கொள்ளாது கஞ்சா, சாராயம் போன்ற சட்டவிரோதமான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறான சட்டவிரோதமான செயல்களில் ஈடுபடுவோரைக் கட்டுப்படுத்துவற்காகவே பொலிஸார் ஆயுதங்களைப் பயன்படுத்துகின்றனரே தவிர வேறெந்த நடவடிக்கைகளுக்காகவும் அவர்கள் ஆயுதங்களைப் பயன்படுத்துவதில்லை.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு நாம் ஒரு மகத்தான சேவையை வழங்கி வருகின்றோம். அந்த மக்களினால் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகளுக்கு சிறந்த தீர்வை வழங்கி வருகின்றோம்.

தற்போது நாடு பூராகவும் மத வேறுபாடின்றி 85 ஆயிரம் பொலிஸார் கடமையாற்றி வருகின்றனர்.இவர்கள் அந்தந்தப் பிரதேச மக்களுடைய நலனுக்காக மகத்தான சேவையை வழங்கி வருகின்றனர்.

இதைவிட 145 வருடங்களில் பொலிஸ் சேவையிலிருந்த 2 ஆயிரத்து 688 பொலிஸ் அத்தியட்சகர்கள் பல்வேறு காரணங்களால் தமது உயிரை தியாகம் செய்துள்ளனர். எனினும் இவர்களது சேவையை நான் நினைவுகூருகிறேன்.

வன்னியிலிருந்த மக்களுக்கு எம்மாலான சேவையை வழங்கி அவர்களுடைய எதிர்கால சந்ததியை சிறப்பான முறையில் உருவாக்கி அர்ப்பணிப்புடனான சேவையை வழங்குவோம் என உறுதியளிக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். இந்நிகழ்வில் மதகுருமார்கள், கரைச்சி பிரதேச செயலக அதிகாரிகள், பொலிஸார் ஆகியோர் கலந்துகொண்டதுடன் 30 பொலிஸ் அத்தியட்சகர்கள் இரத்ததானம் செய்துகொண்டனர்.

நாடு பூராகவும் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களில் ஒரே அளவானதும் ஒரே வடிவத்திலானதுமான பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது. (77,கே)

# மண்டைதீவிலும் மர்மமனிதன் பீதி

மண்டைதீவு கிராமத்தில் வசிக்கும் பொதுமக்களும் அண்மையில் இலங்கையின் தமிழ் பகுதிகளில் பெரும் களேபரத்தையும் கலவரத்தையும் ஏற்படுத்திவரும் மர்மமனிதர்களின் நடமாட்டத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அரைநிரந்தர வீடுகளிலும் குடிசைகளிலும் பெரும்பாலானவர்கள் வசித்துவரும் இந்தக் கிராமத்தில் பயம் காரணமாக இவர்கள் கூட்டம் கூட்டமாக உறவினர்களின் வீடுகளில் ஒன்று சேர்ந்து இரவுப் பொழுதைக் கழித்து வருகின்றனர்.

இதன் காரணமாக வீடுகளில் உள்ள பொருட்கள், தொழில் உபகரணங்கள், புகையிலைச் சிப்பங்கள் என்பவற்றின் பாதுகாப்புக்கும் உறுதிப்பாடு இல்லாத ஒரு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (23)

## விடாது தொடரும்...

சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. நேற்றிரவு சுமார் 10.00 மணியளவில் அராலி அம்மன் வீதியில் வீடொன்றில் உட்புகுந்த மர்ம நபர்களை இனங்கண்ட அப்பிரதேச மக்கள் கலைத்துச் சென்றதாக பிரதேச தகவல்கள் கூறுகின்றன. அதேவேளை மற்றுமொரு பிரதேசமான தொல்புரம் மேற்கில் உள்ள வளவொன்றிலுள்ள மரத்தின் மீது இருந்த மர்ம நபர்களை அவதானித்த மக்கள் அவர்களைத் துரத்திச்சென்றனர்.

மேற்படி சம்பவத்தில் நேற்றிரவு அப்பிரதேசங்களில் பெரும் பதற்றம் நிலவியது. மக்கள் பயத்துடனேயே இரவுப் பொழுதைக் கழித்தனர். மேலும் அப்பிரதேசத்தில் இராணுவத்தின் நடமாட்டமும் அதிகமாகக் காணப்பட்டது என்றும் தகவல்கள் தெரிவித்தன.

## யுத்தத்துக்குப்...

போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய இராணுவ தளபதி, நாட்டுக்குள் சமாதானம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற போதிலும் எவ்வாறானதொரு நெருக்கடியான சந்தர்ப்பங்களிலும் முகங்கொடுக்கும் வகையில் இராணுவத்தினர் தயார்ப்படுத்தப்பட்டுள்ளனர். இதேவேளை, அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டுள்ளதை அடுத்து, சாதாரண சட்டங்களின் கீழ் இராணுவ நடவடிக்கைகள் எவ்வாறு முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது குறித்த தெளிவுபடுத்தல்களையும் விசேட பயிற்சியையும் இராணுவத்தினருக்குத் தற்போது வழங்கி வருகின்றோம் என்றார்.

## நடமாடும்...

செயற்கை அவயவங்கள் வழங்கப்பட்டதுடன் மேலும் 100 பேருக்கு இலவசமாக செயற்கை அவயவங்கள் வழங்கப்படும்.

வன்னியில் மருத்துவ தேவையுடையோர் ஜனாதிபதி செய்லகத்தினூடாக விண்ணப்பப் படிவங்களை பெற்று பூர்த்திசெய்து சமர்ப்பிப்பதன் மூலம் அதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என ஏற்பாட்டாளர்களினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இம்மருத்துவ முகாம் இன்றும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (77,கே)

# மணியந்தோட்டத்தில் மர்ம மனிதன் பீதி

(யாழ்ப்பாணம்)

மணியந்தோட்டம் நான்காம் குறுக்கு வீதியில் அமைந்துள்ள வீடு ஒன்றில் நேற்று முன்தினம் இரவு கிறிஸ் மனிதன் புகுந்து வீட்டில் இருந்தவர்களை அச்சுறுத்தியதுடன் அயலில் உள்ள மற்றொரு வீட்டினுள்ளும் நுழைவதற்கு மேற்கொண்ட முயற்சி அப்பகுதி மக்களிடையே மிகுந்த அச்ச உணர்வைத் தோற்றுவித்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் நடைபெற்ற இச்சம்பவத்தின்போது உறக்கத்திற்கு செல்ல வீட்டிலுள்ளவர்கள் தயாரான வேளை வீட்டின் கிடுகினாலான செத்தை வழியாக கை ஒன்று வருவதனை அவதானித்த வீட்டில் இருந்தவர்கள் அச்சம் காரணமாக கூக்குரலிட்டுக் கொண்டு வீட்டிற்கு வெளியே ஓடிவர கிறிஸ் மனிதன் அங்கிருந்து தப்பியோடியுள்ளார்.

முட்கம்பி வேலிகளையும் தாவிப்பாய்ந்து கடந்துசென்று மறைந்ததை அவ்வீட்டில் இருந்தவர்கள் பார்த்துள்ளனர். பயம் காரணமாகவும் வீட்டைச் சுற்றி முட்கம்பி அமைக்கப்பட்டிருந்ததன் காரணமாகவும் அம்மனிதனைப் பின்தொடர்ந்து செல்ல முடியாமல் போனதாக அம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதன்பின்னர் தாங்கள் வேறு ஒரு வீட்டில் சென்று உறங்கிக் கொண்டதாகவும் தெரிவித்துள்ளனர். மறுநாள் காலையில் வீட்டுக்கு வந்து பார்த்தபோது வீட்டுக்கதவு உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருட்கள் அங்கும் இங்குமாக சிதறிக் காணப்பட்டதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை அவ்வீட்டிற்கு சற்றுத்தொலைவில் இருந்த மற்றுமொரு வீட்டின் வளவிற்குள்ளும் கிறிஸ் மனிதன் புகுந்து அங்கிருந்தவர்களை அச்சுறுத்தி விட்டு மறைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ நேரம் அப்பகுதிகளில் இராணுவத்தினரும் காணப்பட்டதாகவும் அவர்கள் மக்களை வீடுகளுக்குள்ளேயே இருக்கும்படி அறிவுறுத்தியதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (பா)

## கண்காணிப்பு....

வருகின்றது. அதேபோன்று யாழ்ப்பாணத்தின் முக்கியமான இடங்களிலும், படை முகாம்களின் முன்பாகவும் கண்காணிப்பு காணொலிப் பதிவுக் கருவிகளைப் பொருத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

உயர் தொழில்நுட்ப காணொலிப் பதிவுக் கருவிகளைப் பொருத்துவதன் மூலமாக நகர்ப் பகுதியை இரகசியமாக கண்காணிக்க முடிவதுடன், பாதுகாப்பையும் பலப்படுத்த முடியும் என்று பாதுகாப்பு அமைச்சு கருதுவதாகத் தெரியவந்துள்ளது.


## அரசின் பதில்...

அரசுகளுக்கிடையிலான விடயதானங்கள், செயற்பாடுகள் மற்றும் வரி, நிதி அதிகாரங்கள் ஆகிய 3 விடயங்களை முன்வைத்த கூட்டமைப்பு அதற்கு அரசாங்கத்திடமிருந்து இரண்டு வாரங்களுக்குள் பதிலை எதிர்பார்ப்பதாகவும் அதுவரையில் பேச்சுக்கள் சாத்தியமில்லை என்றும் ஏற்கனவே தெரிவித்திருந்தது.

நேற்றுடன் ஒரு மாதம் நிறைவடைந்துள்ள நிலையில் கூட்டமைப்பின் நிலைப்பாடு தொடர்பில் கேட்ட போதே அதன் பேச்சாளரும் யாழ். மாவட்ட எம்.பி. யுமான சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## செய்திப்பாணம்

**ஒருநபரது கொலைக்கு ஒன்பது பேர் பழிவாங்கலா இருந்தாலும் குற்றசெயல் இறைமை - திருந்தாது கொலையும் கொலைக்குக் கொலை கொள்வதுமே தலைக்குக் குறிதான் தப்பு!**



# தீவகத்தில் கடும் காற்று கடல் தொழில் பாதிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.தீவகக் கடற்பரப்புக்களில் கடும் காற்றுக் காரணமாக கடற்தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், மீனவர் படகுகளும் கடலில் மூழ்கும் சம்பவங்களும் நிகழ்ந்திருப்பதாக மீனவர்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கடந்த மாதத்தின் பிற்பகுதியில் இருந்து குறித்த கடற்பரப்பில் கடும் காற்று வீசுவதுடன், கடலும் கொந்தளித்துக் காணப்படுகின்றது. இச்சூழ்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை குருநகரில் இருந்து குறித்த கடற்பரப்பில் கடற்தொழிலுக்கு மீனவர்களுடன் புறப்பட்ட மரத்திலான இழுவைப்படகு ஒன்று பாலைதீவுக் கடற்பரப்பில் கடும் காற்றுக் காரணமாக கடலில் மூழ்கியது. இதில் இருந்த மீனவர்கள் அருகில் கடற்தொழிலில் ஈடுபட்டிருந்த மீன்பிடிப் படகுகளால் காப்பாற்றப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

அத்துடன், கடலில் மூழ்கிய படகு, சுழியோடிகளின் உதவியுடன் மீட்கப்பட்டு கரைக்கு இழுத்து வரப்பட்டதாகவும் தெரியவருகின்றது. அதுதவிர கடந்த மாதம் 30 ஆம் திகதி மண்டைதீவில் இருந்து கடற்தொழிலுக்குச் சென்ற மீன்பிடிப் படகொன்றும் கடும் கடற் காற்றுக் காரணமாக மூழ்கிய சம்பவத்தில் கற்கடதீவுக் கடற்பரப்பில் ஒரு மீனவர் பலியாகியும், ஒருவர் மீட்கப்பட்டமையும் தெரிந்ததே.

எனவே மேலும் இத்தகைய சம்பவங்கள் நிகழாதிருக்க மீனவர்கள் அவதானத்துடன் செயற்படுமாறு கடற்தொழில் அமைப்புக்கள் அறிவுறுத்தியுள்ளன. எனினும், மீனவர்கள் தமது வறுமை நிலையின் காரணமாகவே இத்தகைய பாதகமான சூழ்நிலையிலும் கடற் தொழில் நடவடிக் கையை மேற்கொள்ள வேண்டியிருப்பதாக மீனவர் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. (பா)

# அலரி விதை உண்டவர் மருத்துவமனையில்

அலரி விதை உட்கொண்டு தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட குடும்பப் பெண்ணொருவர் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

உடுவில், ஆலடிப் பகுதியைச் சேர்ந்த சுரேஷ் மோகனா (வயது-23) என்ற குடும்பப் பெண்ணே அலரி விதை உட்கொண்டு தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு யாழ்.போதனா மருத்துவமனையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)

# இருளில் மூழ்கும் வீதி பீதியில் உறையும் மக்கள்

(யாழ்ப்பாணம்)

தட்டாதெருச் சந்தியிலிருந்து ஆறுகால்மடம் வரையான பிரதேசம் மாலையானதும் இருளில் மூழ்கிக்கிடப்பதாக மக்கள் குறைகூறுகின்றனர்.

இப்பகுதியில் உள்ள வீதிகளில் உள்ள மின்கம்பங்களில் மின் குமிழ்கள் இன்மையால் மேற்படி வீதி இருளில் மூழ்கிக் காணப்படுகிறது.

இதனால், இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி விசமிகள் சிலர் சமூகச்சீர்கேடான நடத்தைகளில் ஈடுபட்டு வருவதுடன், கொள்ளைச் செயல்களிலும் ஈடுபடுகின்றனர்.

ஏற்கனவே மர்ம மனிதர்களால் கதிகலங்கி நிற்கின்ற மக்களுக்கு இவ்வாறான நிலைமை மேலும் அசௌகரிங்களை ஏற்படுத்துகின்றமை மனவேதனை அளிக்கிறது.

எனவே, இவ்விடயம் குறித்து இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (எப்.எஸ்)

# ஆவரங்காலில் தெருவிளக்குகள் வீதியெங்கும் விஸ்தரிக்க கோரிக்கை

(அச்சுவேலி)

யாழ்ப்பாணம்-பருத்தித்துறை பிரதான வீதியில் ஆவரங்கால் பகுதியில் இலங்கை மின்சார சபையினால் ஆங்காங்கே மின் கம்பங்கள் தோறும் மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

இரவு வேளையில் இவ்வீதியால் பயணிக்கும் பயணிகளின் பாதுகாப்புக்கருதி பிரதான வீதியில் முக்கிய சந்திகளை அண்டிய பகுதிகளில் மட்டும் இவ்வாறு மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு முக்கிய சில சந்திகளில் மட்டுமே மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ள நிலையில் ஏனைய பகுதிகள் தொடர்ந்தும் இருளிலேயே மூழ்கிக் கிடப்பதனையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

எனவே, ஏனைய பகுதிகளுக்கும் மின் விளக்குகளைப் பொருத்த மின்சாரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பொதுமக்கள் விரும்புகின்றனர். (03)

# சிறுவர் துஷ்பிரயோகம் கடுகதி வேகத்தில் வழக்கு

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்குகளை ஆறு வாரங்களுக்குள் முடிவுக்கு கொண்டுவரும் புதிய செயற்றிட்டமொன்றை ஆரம்பிக்க சட்டமா அதிபர் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. பொலிஸ் மற்றும் நீதியமைச்சுடன் இணைந்து இந்த செயற்றிட்டத்தை செயற்படுத்தவுள்ளதாக பிரதி சொலிஸ்டர் ஜெனரல் பாலித்த பெர்னாண்டோ குறிப்பிடுகிறார். தற்போது சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்கு விசாரணைகள் தாமதமடைவதாகவும், இதனால் பாதிக்கப்படும் சிறுவர்கள் பாரிய மன உலைச்சலுக்கு உள்ளாவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விசாரணைகளை துரிதப்படுத்தும் புதிய செயற்றிடடம் பரீட்சார்த்தமாக ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி அனுஷ்டிக்கப்படும் சிறுவர் தினத்தையொட்டி பொலன்னறுவை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் முன்னெடுக்கப்படவுள்ளது. இது தொடர்பாக பொலிஸார், நீதவான்கள் மற்றும் வைத்திய அதிகாரிகளை தெளிவுபடுத்தும் கருத்தரங்கொன்று எதிர்வரும் ஆறாம் திகதி நடைபெறவுள்ளதாக பிரதி சொலிஸ்டர் ஜெனரல் பாலித்த பெர்னாண்டோ குறிப்பிடுகிறார்.

# சாவகச்சேரியில் விபத்து குடும்பஸ்தர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிப் பகுதியில் பஸ் வண்டியொன்று மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் குடும்பஸ்தர் படுகாயமடைந்துள்ளார். இச்சம்பவத்தில் வாகனச் சாரதி தப்பியோடிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்றுக்காலை 9.30 மணியளவில் இடம்பெற்ற இவ்விபத்தில் முல்லைத்தீவு, மூங்கிலாறு பகுதியைச் சேர்ந்த எஸ்.லோகேஸ்வரன் (வயது-32) என்னும் குடும்பஸ்தர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)


முதல் தடவையாக யாழ். மண்ணில் ஆங்கிலக் கல்வியின் புதிய பரிமாணம்!



NALRAVI SPOKEN ENGLISH





தலைநகரில் 20 வருடங்களுக்கு மேலாக தலைசிறந்து விளங்கும் பிரபல ஆங்கில ஆசிரியர் திரு.ஜெய நல்ரவி அவர்களால் நடாத்தப்படும் மாபெரும் பேச்சு ஆங்கிலப் பயிற்சிப் பட்டறை.

A/L நிறைவு செய்த மாணவர்களுக்காக
குறிப்பு:- எங்கள் கல்வி நுணுக்கங்களை அறிந்து கொள்ளும் பொருட்டு முதல் நாளன்று மாணவர்களுடன் பெற்றோர்களும் இணைந்து கொள்ளலாம்.

முதல் நாள் பயிற்சி (செப்டெம்பர் 5ஆம் திகதி அன்று) இலவசம்

செப்டெம்பர் 5ஆம் திகதியன்றிலிருந்தே (1ஆம் நாள்) ஆங்கிலம் பேச ஆரம்பித்து பயிற்சிப் பட்டறை இறுதியில் சரளமாக ஆங்கிலம் பேசுவீர்கள் என்ற தன்னம்பிக்கையை முதல் நாளிலேயே பெறுங்கள்.

இது நடக்குமா? இல்லாவிட்டால் விளம்பர ஆசை வார்த்தைகளா?

உண்மையை கண்டறிய வாரீர்.

மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், வெளிநாடு செல்ல இருப்போர், KET மற்றும் IELTS பரீட்சைக்கு தோற்றுவோர், அலுவலகம் செல்வோர், இல்லத்தரசிகள் போன்றவர்களுக்காகவும்

| | |
|---|---|
| நடைபெறும் இடம் | :- யாழ்.வீரசிங்கம் மண்டபம் |
| பயிற்சிக் காலம் | :- 1 மாதம் / 100 மணி நேரம் |
| நடைபெறும் காலம் | :- செப்டெம்பர் 5ஆம் திகதி முதல் ஒக்டோபர் 11ஆம் திகதி வரை |
| நேரம் | :- குழு 1 - காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரை குழு 2 - நண்பகல் 1.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை |
| பயிற்சிக் கட்டணம் | :- Rs.6,500/= (NSE பயிற்சி Handouts, Audio CD க்கள் உட்பட) முதல் நாள் பயிற்சி இலவசம். |

NALBON
INSTITUTE OF ENGLISH STUDIES
We are born for your bond
527, Galle Road, Colombo 6. Tel 2363656 Fax 2360004
Website www.nalravi.com E-mail nalravi@yahoo.com

எங்கள் பேச்சு ஆங்கிலப் பயிற்சிப் பட்டறை இறுதியில் மாணவர்கள் பரீட்சிக்கப்பட்டு அவர்களின் பெறுபேறுகளிற்கேற்ப தரங்கள் வழங்கப்பட்டு சான்றிதழ்கள் கொடுக்கப்படும்.

(சர்வதேச வலையமைப்பில் இணைந்து கொள்ளும் நோக்கோடு NALRAVI ENGLISH LANGUAGE CENTRE NALBON INSTITUTE OF ENGLISH STUDIES எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.)

(C/919)


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 செப்ரெம்பர் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.